# நமது செட்டிநாடு

மலர் 1 ✿ மணம் 10 ✿ மன்மத ஆண்டு மாசி ✿ பிப்ரவரி 2016 ✿ ரூ.20

குன்றக்குடியில், செட்டிநாடு குழுமம் சார்பாக அமையவிருக்கும் முதியோர் இல்லத்திற்கான பூமி பூஜை நிகழ்ச்சியில் செட்டிநாடு குழும மேலாண்மை இயக்குனர் திரு.எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா அவர்களின் மனைவி திருமதி கீதா முத்தையா.

நமது செட்டிநாடு

மலர் 1 மணம் 10 பிப்ரவரி 2016
மன்மத ஆண்டு மாசி மாதம்

புரவலர்
**இராஜாமணி முத்துகணேசன்**

ஆசிரியர்
**ந.ஆவுடையப்பன்**

பதிப்பாளர்
**அண.வயிரவன்**

ஆசிரியர் குழு
**புதுவயல் செல்லப்பன்**
**குழ.கதிரேசன்**
**ஆராவயல் ஆர்எம். சண்முகம்**
**முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி**

வடிவமைப்பு
**ஜே.மோகன்**

இணைய இதழ் முகவரி
www.namadhuchettinad.com
இணைய இதழ் மேலாண்மை
**எஸ்.ராமசாமி** பி.எஸ்சி.

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**நமது செட்டிநாடு** மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 6–வது தளம்,
603, அண்ணா சாலை,
சென்னை 600 006
தொலைபேசி: 044–4298 8672

namadhuchettinad@gmail.com
என்ற மின்னஞ்சலிலும் தொடர்பு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 240/– |
| ஈராண்டு சந்தா | ரூ. | 480/– |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. | 1,200/– |
| வாழ்நாள் சந்தா | ரூ. | 10,000/– |


**இராஜாமணி முத்துகணேசன்**
புரவலர்
நமது செட்டிநாடு
ராணி சீதை அரங்கம், 6–வது தளம்,
603, அண்ணா சாலை,
சென்னை 600 006.

# நமது இலக்கு

நமது இதழுக்குச் சந்தா செலுத்துவது குறித்து உரிய படிவம் கடந்த இதழோடு இணைத்து அனுப்பப்பட்டது. நமது பெருமக்கள் அதிக அளவில் உறுப்பினராக முன்வந்து, சந்தா தொகை செலுத்தி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. தொடர்ந்து இதழுக்கு உறுப்பினர் சேர்க்கும் பணி நடைபெறும். நமது செட்டிநாடு இதழ் மூலம் அனைத்து குடும்பங்களையும் இணைப்பது என்பதே நமது இலக்கு.

அது நிறைவேற அனைவரும் ஒத்துழைப்பு நல்க அன்புடன் வேண்டுகிறேன்.

தைப்பூசத்தை முன்னிட்டு, நமது சொந்தங்கள் விரதமிருந்து குன்றக்குடியிலிருந்து பழனிக்கு ஏறத்தாழ 400 பக்தர்கள், காவடிகளுடன் நடைப்பயணமாகச் சென்றார்கள். அவர்களின் நடைப்பயணத்தின் போது பயன்பாட்டிற்குத் தேவையான குளிர்பானம், தண்ணீர், பிஸ்கட் பாக்கெட், விபூதிப் பை, ஆன்மிகப் புத்தகம், சத்துணவு மாவு உருண்டை, துண்டு உள்ளிட்ட பொருட்கள் குன்றக்குடி திருக்குளக்கரை சரவணப் பொய்கை அருகே பக்தர்களால் வழங்கப்பட்டன.

இந் நிகழ்ச்சியில் நமது செட்டிநாடு இதழும் பங்கேற்றது மனத்திற்கு மகிழ்ச்சியாக

உள்ளது. அன்றைய தினம் அதிகாலையிலிருந்தே குன்றக்குடியில் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. வாகனங்கள் நிறுத்த, இடம் தேடி அலையும் அளவிற்கு வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. பக்திப் பரவசத்துடன் ஒவ்வொருவரும் வலம் வந்ததை அன்று காண முடிந்தது.

இருப்பினும் குன்றக்குடி சரவணப் பொய்கை குளத்திற்குச் செல்லும் பாதை, குளக்கரை என அனைத்து இடங்களிலும் பக்தர்கள் பயன்படுத்திய உணவுப் பண்டங்கள் உள்ளிட்ட பொருட்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. ஆனாலும் பக்தர்களுக்கு அவை ஒரு தடையாக இல்லை. இறைவனின் திருநாமத்தை மட்டுமே போற்றி, தங்கள் கடமைகளைச் செய்தவண்ணமாக இருந்தனர். அப்போது நமது மனதில் 'Cleanliness is next to Godliness' என்ற முதுமொழியே நினைவிற்கு வந்தது.

இந்தியா முழுமையும் 'ஸ்வச் பாரத்' என்ற 'தூய்மை இந்தியா' பற்றி சமீபகாலமாக, அதிகமாகப் பேசப்பட்டும், அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வரும் சூழலில், வரும் ஆண்டுகளில் குன்றக்குடி மடம் மற்றும் குன்றக்குடி ஊராட்சி மன்றத்துடன் இணைந்து தைப்பூசத் திருவிழா சமயத்தில் குன்றக்குடியில் தூய்மைப் பணியில் நமது செட்டிநாடு இதழ் சார்பாக ஈடுபடலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தினை செயலாக்கம் செய்வது குறித்து, உரியவர்களிடம் கலந்தாலோசித்து, நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்,

இராஜாமணி முத்துகணேசன்

அட்டையில்:

நாட்டரசன்கோட்டை, அருள்மிகு கண்ணாத்தாள் கோவில் செவ்வாய் பொங்கல் விழாக் காட்சி.

# உள்ளே...

நமது செட்டிநாடு

6



10

16

20

27


டென்னிஸ் உலகின் இளம் புயல் 6

நன்கொடை 9

சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பா
*–புதுவயல் செல்லப்பன்* 10

தேனும் ஆரோக்கியமும் 15

சிலம்பின் கதை *–தொடர்*
*–ஞா.மாணிக்கவாசகன்* 16

நிதி பராமரிப்பில் நிதியில்லா விவர பராமரிப்பு 20
*–கண்ணன்*

சமைப்போம் சுவைப்போம் 23

நகரத்தார் சிகரத்தார் *–தொடர்* 24
*–காரைக்குடி நாராயணன்*

இ.பி.கோ.வும் இன்பத் திருக்குறளும்
*–தொடர் – வழக்கறிஞர் என்.எஸ்.ராஜன்* 27

மருத்துவர்களில் ஒரு சகாப்தம் 29
*–பேட்டி: எஸ்.ரஜத்*

தைப்பூசத் திருவிழாவின் மகிமை! 32
*–பரசுராமன்*

ஓடிப்போனவன் – *சிறுகதை* 36
*–ஏஎல்.எஸ்.நாச்சியப்பன்*

செட்டிநாடு போஸ்ட் 44

இது நம்ம நாடு 45

திருமண சேவை / வேலையைத் தேடி... 46

உறுப்பினர் சேர்க்கை படிவம் 47

வாசகர்கள் கவனத்திற்கு... 48

சிறுவர் நாடு 49

# டென்னிஸ் உலகின் இளைய புயல்!

நேற்று ராமனாதன் கிருஷ்ணன், அமிர்தராஜ் சகோதரர்கள்,

இன்று சானியா மிர்சா,

நாளை ராமனாதன் ராம்குமார்.

இந்திய டென்னிஸ் வரலாற்றில் உலகப் புகழ் பெற்றவர்கள் மிகச் சிலரே. ஐரோப்பியர்கள் விளையாட்டு எனப் பரவலாகப் பேசப்படும் டென்னிஸ் விளையாட்டைப் பயின்று, சாதனை படைக்க வசதியற்றவர்களால் இயலாது. ஆனாலும் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, தங்கள் விடாமுயற்சியால் உலகப் புகழ் பெற்ற வீரர்களாகத் திகழ்பவர்களே மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்.

இவர்களில் ராமனாதன் ராம்குமார், காரைக்குடி குமரப்ப செட்டியார் மகன் ராமனாதன் – கோட்டையூர் லெ.அ.மு.சுப்பிரமணியன் செட்டியார் மகள் அழகம்மை ஈன்றெடுத்த தவப்புதல்வன். இன்று 21 வயதில் உலகம் அறிந்த, சிறந்த டென்னிஸ் வீரர்களில் ஒருவர். காரைக்குடியில் நா.குனா. வீடு என அழைக்கப்படும் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர்.

டென்னிஸ் விளையாட்டில் இந்திய மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் இந்த தமிழ் இளைஞர் பற்றிய செய்திகள், சமீபகாலமாக பத்திரிகைகளில் வலம் வந்தன. நேர்காணலுக்காக அணுகியபோது கிடைத்த சுவாரஸ்யமான தகவல்களின் தொகுப்பு இதோ –

**ஆர்வம் ஏற்பட்டது எப்படி?**

இவரது தந்தை ராமனாதன், ஷட்டில்காக், பூப்பந்து விளையாட்டுகளில் சிறந்து விளங்கியவர். விளையாடப் போகும்போது சிறுவனான ராம்குமாரைத் தன்னுடன் அழைத்துச் செல்வது வழக்கம். சுறுசுறுப்பும் துடிப்பும் கொண்ட சிறுவன் ராம்குமார், அப்பாவின் விளையாட்டில் லயித்து, பேட்டுடன் தொடர்புடைய டென்னிஸ் விளையாட்டை எட்டு வயதில் ஆடத் தொடங்கி உள்ளார். ஆர்வத்தைக் கண்ட பெற்றோர், அணை போடாது, அரவணைத்து, ஆர்வத்தை வளர்த்தனர்.

**படிப்பு?**

உயர்நிலைக் கல்வி வரை கோட்டூர்புரம் ஏ.எம்.எம். மெட்ரிகுலேஷன் பள்ளி, சேத்துப்பட்டு கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் +2 படிப்பு, தற்போது லயோலா கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் படிக்கிறார்.

**திருப்புமுனை?**

பத்து வயதில் மாநில அளவு, 12 வயதில் இந்திய அளவில் நடந்த போட்டிகளில் பங்கேற்றுப் பலரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளையாடி, வெற்றிகளைப் பெற்றுள்ளார். 15 வயதில், 18 வயதுக்குட்பட்டோர்களுக்கான போட்டியில் தங்கம் வென்றார். இப் போட்டி, இவரது டென்னிஸ் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

**பயிற்சி பற்றி...**

டென்னிஸ் விளையாட்டில் பிரகாசிக்க, பயிற்சி மிகவும் முக்கியத் தேவை. தினசரி காலையில் மூன்று மணி நேரம், மாலையில் மூன்று மணி நேரம் என விளையாட்டுப் பயிற்சி, இரண்டு மணி நேரம் உடற்பயிற்சி என, கடுமையான பயிற்சியே ராம்குமாரை இந்த நிலைக்கு உயர்த்தி உள்ளது. தனது 14-16 வயதில் ஸ்பெயின் நாட்டில் பெற்ற பயிற்சி, தனக்கு மிகவும் பயனுள்ளதாகக் கருதுகிறார்.

**ஸ்பான்சர் பற்றி...**

ஸ்பெயின் நாட்டில் பயிற்சி பெற தமிழ்நாடு டென்னிஸ் அசோஷியேஷன் உதவி செய்தது. தனி நபர், நிறுவனங்கள் ஸ்பான்சர் கிடைத்தால் விளையாட்டில் மேலும் ஊக்கத்துடன் ஈடுபட முடியும் என்கிறார் ராம்குமார் அப்பச்சி ராமனாதன்.

**பெற்றோர் ஊக்கம் பற்றி...**

சிறுவயதில் தினசரி பயிற்சிக்குக் காலையிலும் மாலையிலும் உடன் சென்று திரும்ப அழைத்து வரவேண்டும். அதனை ஆர்வத்துடன்

# சாதனைத் துளிகள்...

*2008–இல், செக் குடியரசில் நடைபெற்ற உலக ஜூனியர்–14 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவு டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று உலகளவில் 3–வது இடத்தைப் பிடித்தார்.*

*சென்னையில் 2009–இல் நடைபெற்ற 'எம்.சி.சி. – அடிடாஸ்' நடத்திய 18 வயதுக்கு உட்பட்டவர்கள் போட்டியில், தனது 15–வது வயதில், தனி நபர் மற்றும் இரட்டையர் ஆட்டத்தில் பட்டம் வென்றார்.*

*இதே ஆண்டில், ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் 'சான் செக்–காசல்' அகாடமியில் வெளிநாட்டு பயிற்சியில் முதல்முறையாகக் கலந்து கொண்டார். செர் ஜியோ காசல் மற்றும் ஜூவான் பால்செல்ஸ் ஆகிய ஸ்பெயின் நாட்டு முன்னாள் – Top Seeded டென்னிஸ் விளையாட்டு வீரர்களின் கண்காணிப்பில் இப் பயிற்சி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.*

*2013–இல், 18 வயதில் கொல்கத்தாவில் தேசிய அளவில் நடைபெற்ற, ஆண்களுக்கான போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்றார். இதே ஆண்டில் ராய்பூர் மற்றும் கம்போடியாவில் நடைபெற்ற போட்டிகளில் வென்று உலகளவில் 526–வது இடத்தைப் பெற்றார்.*

*2014–இல் சென்னையில் நடைபெற்ற ATP-Aircel டென்னிஸ் தகுதிப் போட்டியில் 3 சுற்றுகளில் வென்றார். இப் போட்டியில் இந்திய டென்னிஸ் ஜாம்பவான் சோம்தேவ் தேவ்வர்மனை வென்றது குறிப்பிடத்தக்கது. இதே ஆண்டில் இன்டர்நேஷனல் டென்னிஸ் பெடரேஷன் நடத்திய ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்று, உலகத் தரவரிசைப் பட்டியலில் 211 –ஆம் இடத்தைப் பிடித்தார்.*

*ஆண்டின் இறுதியில் உலகத் தரவரிசைப் பட்டியலில் 241–வது இடம் பெற்ற ராம்குமார் இந்திய டேவிஸ் கப் குழுவிலும் இடம் பிடித்தார்.*

*2015–இல் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் பங்கேற்று, இந்தியா திரும்பியவுடன் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் தமிழக அணியினர் ராம்குமார் தலைமையில் கலந்துகொண்டனர். இந்தப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்கள் பெற்றதுடன் தனிநபர் சாம்பியன் பட்டமும் வென்றுள்ளார்.*

*தற்போது உலகத் தர வரிசைப் பட்டியலில் 206–வது, மற்றும் இந்தியத் தரவரிசையில் நான்காம் இடத்திலும் உள்ள ராம்குமார், 2016 பிப்ரவரியில் கவுஹாத்தியில் நடைபெற்ற 12–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் தங்கம் வென்றுள்ளார்.*




செய்து வந்தோம். தற்போது மாதம் இருபது நாட்கள் வெளியூர், வெளிநாடு என செல்வதால் அதற்கான ஆயத்த ஏற்பாடுகளை நானும் எனது மனைவி அழகம்மையும் கவனித்துக் கொள்கிறோம். வெளிநாட்டு டென்னிஸ் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, கடிதம் பெறுவது, விசா பெற அயலகத் தூதரகங்களுக்குச் செல்வது என அடிப்படை வேலைகளைச் செய்து வருகிறோம். இவ்வாறு ராம்குமாருக்குப் பல வகைகளில் உதவி வருகிறோம்.

அதுமட்டுமல்ல, 16-20 வயது, டென்னிஸ் வீரர்களின் முயற்சிக்கு முக்கியமான காலகட்டம். இந்த வயதில் பிரபலமான வீரர்களுடன் விளையாட வேண்டும். தோல்விகளைக் கண்டு மனம் தளராமல் தீவிர பயிற்சி எடுக்க வேண்டும். வெளிநாடுகளில் நடக்கும் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். அப்போதுதான் உலகத் தரவரிசையில் இடம் பெற முடியும். தர வரிசை ஓராண்டிற்கானது. இடையில் சில போட்டிகளில் விளையாடவில்லையெனில் தர வரிசையில் பின் தங்கி விடுவர். இந்தச் சிரமங்களை எதிர்கொள்ள இயலாதவர்கள் விளையாட்டை விட்டுவிட்டு படிப்பில் கவனம் செலுத்த சென்று விடுவர். டென்னிஸ் வீரர்களுக்கு மனோபலமும், விளையாட்டை எதிர் கொள்ள துணிச்சலும், கூடவே பொருளாதார பின்புலமும் தேவைப்படும். பெற்றோர் என்ற முறையில் ராம்குமாருக்கு ஊக்கம் அளித்து வந்துள்ளோம் என்கிறார் ராமனாதன்.

**உணவுப் பழக்கம் பற்றி...**

டென்னிஸ் விளையாட 'ஸ்டெமினா' மிகவும் அவசியம். இது கூடி விளையாடும் குழு விளையாட்டு அல்ல. தனி நபர் ஆட்டம். சில சமயங்களில் இரட்டையர் ஆட்டம். சத்தான உணவு தேவை. மேல்நாடுகளில், வீரர்கள் தங்களுக்கென தனியாக 'டயடீசியன்'களை வைத்துக் கொள்வர். அந்த வழக்கம் இங்கு இல்லை. 'டயடீசியன்' அறிவுரை பெற்றுச் செயல்படுகின்றனர். காரம், புளி, உப்பு மிதமாக உள்ள உணவு வகைகளை ராம்குமார் எடுத்துக் கொள்வார் என அழகம்மை வாஞ்சையுடன் தெரிவித்தார்.

**குடும்பம் பற்றி...**

அப்பா ஜவுளி வர்த்தகம். அம்மா ஹோம் மேக்கர். ராம்குமார் உடன்பிறந்த சகோதரி உமா. இவர் மென்பொருள் பொறியாளர். இவரது கணவர் பழனியப்பன். இருவரும் சிங்கப்பூரில் மென்பொருள் துறையில் பணி புரிகின்றனர்.

**எதிர்கால லட்சியம்...**

இந்தியாவின் பெயரை டென்னிஸ் விளையாட்டில் உயர்த்திப் பிடிப்பது. 'கிராண்ட் ஸ்லாம்' பட்டங்கள் வெல்வது என நம்பிக்கையுடன் விளையாட்டில் ஈடுபட்டுள்ளார் ராம்குமார். உண்மைதானே, இவர்தான் இந்திய டென்னிஸின் எதிர்காலம் என சமீபத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற வெற்றிகளே சான்றாக உள்ளன. ராம்குமார் லட்சியம் நிறைவேற நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

# நன்கொடை

ஆவிணிப்பட்டி வ.ஆண்டியப்பன் மகள் ராஜா மணி (எ) சொர்ணாம்பிகா திருமண நிதி உதவித் தொகையாக, ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார்பாக வழங்கப்பட்டது.

கோனாபட்டு நா.சுப்பிரமணியன் மகள் செல்வி மங்கையர்க்கரசி திருமண நிதி உதவித் தொகையாக ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார்பாக வழங்கப்பட்டது.



ஆராவயல் சித. தெய்வராயன் மகள் மீனாள் (எ) அன்னலெட்சுமி திருமண நிதி உதவியாக ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார்பாக வழங்கப்பட்டது. படத்தில் தெய்வராயன், மணமகள் மீனாள் (எ) அன்ன லெட்சுமி, மெ.சேது - வர்த்தகப் பிரிவு மேலாளர் ஆகியோர்.

ஆராவயல் சுப.பெரிச்சியப்பன் (எ) ராமசாமி மகள் செல்வி.பெ.தனலெட்சுமி திருமண நிதி உதவித் தொகையாக ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார் பாக வழங்கப்பட்டது. படத்தில் சுப.பெரிச்சியப்பன், செல்வி பெ.தனலெட்சுமி, இந்திரா பெரிச்சியப்பன், மெ.சேது ஆகியோர்.

இராயவரம், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம், 12.2.2016 வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, கும்பாபிஷேக மலர் வெளியிடவும் உத் தேசிக்கப்பட்டுள்ளது. விழா மலரில் விளம்பரம் வெளியிடவும், கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வும் நமது செட்டிநாடு இதழ் சார்பாக ரூ.50,000/- நன்கொடை வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், வேகுப்பட்டி ஆவு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் மகள் வளத்

தம்மை (எ) சித்ரா திருமண நிதி உதவியாக ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார்பாக வழங்கப்பட்டது. படத்தில் ஆவு.பழ.சுப்பிரமணியன், திருமதி விஜயா, மணப்பெண் சித்ரா, மெ.சேது ஆகியோர்.

சிவகங்கை மாவட்டம், நடராஜபுரம், சூரக்குடி கோவிலைச் சேர்ந்த சோம.காளீஸ்வரன் மகள் செல்வி கே.பிரியங்கா இரண்டாம் ஆண்டு பொறி யியல் படிப்பிற்கு கல்வி உதவித்தொகையாக ரூ.10,000 நமது செட்டிநாடு இதழ் சார்பாக திரு.மெ.சேது, வழங்கினார்.

சென்னை பாடியில் வசித்துவரும் மதகுபட்டி திருமதி கே.தேவியின் பெண் குழந்தைகள் செல்வி சொர்ணலட்சுமி 9-ஆம் வகுப்பு, செல்வி இரங்கநாயகி 6-ஆம் வகுப்பு மாணவிகள் கல்வி நிதி உதவியாக ரூ.10,000, நமது செட்டிநாடு இதழ் சார்பாக, திருமதி கே.தேவியிடம், அண.வைரவன்-பதிப்பாளர், நமது செட்டிநாடு காசோலை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம் வி.லெட்சுமிபுரம் நகரத்தார் மகளிர் மருத்துவ ஆலோசனை மையம் முதியவர்களுக்காக நடத்தும் மருத்துவப் பரிசோ தனை உள்ளிட்ட செலவினங்கள் ஈடு செய்ய நமது செட்டிநாடு இதழ் ரூ.4,000 நன்கொடையாக வழங்கி யது.

# நகரத்தாரின் ஆன்மிகத் தொண்டும் அருந்தமிழ்ப் பணியும்



வங்காளத்தில், கணவன் மரணமுற்றபின், அவன் உடலைத் தீயில் எரிக்கும்போது உயிருடன் உள்ள அவன் மனைவியையும் அத்தீயில் எரித்து விடும் 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்துத் தடுத்து நிறுத்தியவர் இராஜா ராம்மோகன் ராய். அவர் போலவே நம் தென்னாட்டில் கணவன் இறந்தபின் விதவைகள் என்று பெண்களை ஒதுக்கி வைத்து, அவர்களின் வாழ்வை வெறுமையாக்கும் வழக்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டவர் நகரத்தார் குலத்தினரான சொ. முருகப்பா.

எனவேதான் அவர் 'தென்னாட்டு இராஜா ராம்மோகன் ராய்' என்றும் 'சீர்திருத்தச் செம்மல்' என்றும், போற்றப் பெற்றார். மேலும் நகரத்தார் சமூகம் சீர்திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை முதன்முதலில் செயல்படுத்தத் தொடங்கியவரும் அவர்தான்.

அவர் பிறந்த ஊர் இந்நாளில் செட்டிநாட்டின் தலைநகரம் போல் விளங்கும் காரைக்குடி. சிவகங்கை மாவட்டத்தில் மிகப் பெரிய வணிக நகரம்.

முருகப்பாவின் தந்தையார் சி.சொ.சொக்கலிங்கம் செட்டியார். தாயார் விசாலாட்சி ஆச்சி. பிறந்த நாள் 21.08.1893.

நகரத்தார் சார்ந்த ஒன்பது கோயில்களில் ஒன்றான பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சார்ந்தவர்.

முருகப்பா, நகரத்தார் வழக்கப்படி கல்வி பயிலத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அரிச்சுவடி, முந்திரி இலக்கம், கீழ்வாயிலக்கம், எண்சுவடி, பிரவாச்சுவடி, மூதுரை, நல்வழி, நன்னெறி என்று கற்றுத் தேர்ந்தவர்.

பின்னர் தமிழ் இலக்கண இலக்கியங்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பட்டம் பெற்ற சிதம்பரம் ஐயரை ஆசிரியராகக் கொண்டு முறைப்படி, பயின்று தேர்ச்சி பெற்றார்.

தம் 19-ஆம் வயதில், அம்மான் மகளான பொற்கொடியைத் திருமணம் செய்து கொண்டார்.

பாதரக்குடி சுவாமிகளிடம் ஐந்தெழுத்து உபதேசம் பெற்று, இந்து சமயத்தில் பற்றுள்ளவராக இருந்தார்.

குல வழக்கப்படி தொழில் செய்வதற்கு, மலாயா நாட்டில் உள்ள ஈப்போ என்னும் நகருக்குச் சென்று, 1913-ஆம் ஆண்டு முதல் 1916-ஆம் ஆண்டு வரை அங்கு தொழில் செய்தார்.

அக்காலகட்டத்தில் ஞானிகளும் அருளாளர்களும் உணர்ந்து போற்றிய இந்து மதத் தமிழ்ச் சமயம் தடம் மாறிச் செல்வதைக் கண்டு மனம் வருந்தினார். தமிழ் மக்களுக்குத் தாம் உணர்ந்துகொண்ட உண்மையான சமய அறிவைப் புகட்ட வேண்டும் என்றும், பொது வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எண்ணினார்.

இந்நிலையில் மலாயாவிலிருந்து காரைக்குடிக்குத் திரும்பினார்.

எழுச்சி பெற்ற மனத்தோடு இந்தியா திரும்பிய முருகப்பாவுடன், இராய.சொக்கலிங்கனார், கம்பனடிப்பொடி சா.கணேசனார், தி.நாராயணன் செட்டியார், அ. மு .க. மு. கருப்பன் செட்டியார் முதலிய இருபது அன்பர்கள் இணைந்தனர். 1917-இல் இந்து மதாபிமான சங்கம் உருவாயிற்று.

அச்சங்கம் இந்து சமயத்துக்கும் நாட்டு விடுதலைக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய பெருமையுடையது.

கானாடுகாத்தான் வை.சு.சண்முகனாரின் அழைப்பை ஏற்று, அவர் வீட்டுக்கு வந்து, 28. 10. 1919 முதல் 10.11.1919 வரை தங்கியிருந்த மகாகவி பாரதியார் கடையம் திரும்பும்போது, காரைக்குடியில் இரண்டு மூன்று நாட்கள் தங்கியுள்ளார். அப்போது, 9.11.1919 அன்று, இந்து மதாபிமான சங்கத்திற்கு வந்து, அதன் செயல்பாடுகளைக் கண்டு, பெருமகிழ்வுற்றுப் பாராட்டியதுடன், அச் சங்க உறுப்பினர்களுடன் அமர்ந்து, நிழற்படமும் எடுத்துக் கொண்டார். மேலும் அச்சங்கத்தாரின் வேண்டுகோளை ஏற்று, ஏழு பாக்களால் அதனை வாழ்த்தியும் உள்ளார்.

தமிழகத்தில் பாரதியாரின் பாடல் பெற்ற ஒரே

புதுவயல் செல்லப்பன்

# சீர்திருத்தச் செம்மல் சோ.முருகப்பா

சங்கம் காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் மட்டுமே.

இந்து மதாபிமான சங்கம் தொடங்கப்பட்டபின் முருகப்பா, காரைக்குடியில் 'இராமகிருஷ்ண கலாசாலை' என்றொரு அமைப்பை உருவாக்கி, அதில் மேற்குறிப்பிட்ட சிதம்பரம் ஐயரையே ஆசிரியராக நியமித்து, முறையாகத் தமிழ் கற்றறியும் வாய்ப்பினைப் பலருக்கும் ஏற்படுத்தித் தந்தார். முருகப்பாவும் தொடர்ந்து, அக் கலாசாலையில் தமிழ் பயின்றார்.

11.9.1919 அன்று, இந்து மதாபிமான சங்க உறுப்பினர்கள் சிலருடன் இணைந்து, தனவைசிய ஊழியர் சங்கத்தைத் தொடங்கினார். அச்சங்கத்தின் சார்பில் தாமே ஆசிரியராக இருந்து 'தனவைசிய ஊழியன்' என்ற இதழை நடத்தினார்.

15.7.1921-இல்முருகப்பாவின்பெருமுயற்சியால் 96 ஊர் நகரத்தார் கூட்டம் கூட்டப் பெற்றது.

பின்னர், சில காரணங்களால் தனவைசிய ஊழியன் இதழின் ஆசிரியர் பொறுப்பை இராய. சொக்கலிங்கனாரிடம் ஒப்படைத்துவிட்டு, அச்சங் கத்திலிருந்து விலகினார்.

17.3.1922-இல் காரைச் சிவனடியார் திருக்கூட் டத்தைத் தொடங்கினார். அதன் சார்பில் 1922-ஆம் ஆண்டு மே மாதம் 'குமரன்' என்னும் திங்கள் இதழைத் தாமே ஆசிரியராக இருந்து சில ஆண்டு கள் வெளியிட்டார். அவ்விதழ் முற்றிலும் இலக்கிய இதழாகப் பல தமிழறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. திரு.வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' என்னும் மிகச் சிறந்த கட்டுரை, அவ்விதழில்தான் வெளிவந்தது.

22.8.1923-இல்குமரன்வார இதழைத்தொடங்கி, 25 ஆண்டுகளுக்கு மேல் தாமே ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் செயல்பட்டுப் பலரும் போற்றத்தக்க வகையில் நடத்தினார்.

முதல் இதழில், 'சமூக வளர்ச்சியொரு கண்ணும் சமய வளர்ச்சியொரு கண்ணுமாகவே குமரன் கருதி ஊழியம் புரிந்து வருவான்' என்றும் 'தேசிய விஷயங்களுள் மிகச் சிறந்ததான கதரியக்கத்தில் முற்றும் கலந்துழைப்பதும், சமய வழியில் அஹிம்சா தருமத்தையே கண்மணியாகக் கருதியுழைப்பதும் குமரனது நோக்கங்களாகும்' என்றும் முருகப்பா குறிப்பிட்டுள்ளார்.

முதல் இரு ஆண்டுகள் 'குமரன்' வார இதழின் குறிக்கோள்களாக 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் நலங்கருதி உழைப்பது', 'ஆலயம் தொழுவது சால வும் நன்று', 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற சொற்றொடர்கள் இருந்தன.

1926-இல் இவற்றுக்கு மாற்றாக 'கதரே உயிர்', 'கருணையே தெய்வம்' என்ற தொடர்கள் இடம்பெற்றன.

1930-இல் இருந்து மேலே குறிப்பிட்ட சொற் றொடர்களில் எதுவுமே இல்லாமல்

**'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**
**எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்'**

என்ற குறட்பாக்கள் இடம்பெற்றன.

இம்மாற்றங்களுக்குக் காரணம் முருகப்பாவின் கொள்கை மாற்றங்களே. தொடக்கத்தில் நகரத் தார் சமூகச் சீர்திருத்தத்திற்காகவும் நாட்டு விடு தலைக்காகவும் இவ்விதழைத் தொடங்கிய முரு கப்பா, காலப்போக்கில், பெரியார் ஈ.வெ.ராவுடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாகச் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கும் பயன் படுத்தினார் என்பதை மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் மூலம் அறியலாம்.

'குமரன்' வார இதழிலும் செய்திகளுடன் இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகளும் இடம் பெற்றன. மகாகவி பாரதியாரின் கவிதைகள், திரு.வி.க., ரா.பி.சேதுப்பிள்ளை, சாமி சிதம்பரனார், டி.கே. சிதம்பரநாத முதலியார், விபுலானந்த அடிகள், தி.நா.சுப்பிரமணியம் போன்றோரின் படைப்புகள் வெளியிடப் பெற்றன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களை முதன்முதலில் வெளியிட்ட இதழ் 'குமரன்'தான். அன்பையும் இரக்கத்தையும் போதித்த புத்தரின் வரலாறையும் சிந்தனைகளையும் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை 'ஆசிய ஜோதி' என்னும் காப்பியத்தை எழுதச் செய்தார் முருகப்பா.

செட்டிநாட்டில் பல மரபுக் கவிஞர்கள் உருவானதற்குக் காரணம் 'குமரன்' வார இதழ் நடத்திய வெண்பாப் போட்டியே. ஒவ்வொரு வாரமும் ஈற்றடி தந்து, வெண்பா எழுதச் செய்து, குமரனில் வெளியிடப் பெற்றது. அக்காலகட்டத்தில் 'குமரன்' வெளிவரும் நாளாகிய வியாழக்கிழமைக்காகக் காத்திருந்த இளைஞர்கள் எண்ணற்றவர்.

அவ்வாறு ஈற்றடி தந்து எழுதப் பெற்ற ஒரு வெண்பா குமரனில் வெளிவந்தது.

**கல்லான் கலையுணரான் காதற் சிறிதுமிலான்**
**பொல்லான் புகழுமி லானென்று – தொல்லுலகில்**
**எல்லாரும் சொல்லாமல் என்றன் மடமையெனும்**
**பொல்லாத வல்லிரவே போ.**

(புதுவயல் செல்லப்பன்)

'குமரன்' பத்திரிகையில் பணியாற்றிய பலர் பின்னாளில் போற்றத்தக்க எழுத்தாளர்களாகவும் கலைஞர்களாகவும் விளங்கினர். அத்தகையோரில் பி.ஸ்ரீ., பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களை உருவாக்கிய 'பொன்னி' இதழின் ஆசிரியர் முருகு சுப்பிரமணியன், திரைப்பட இயக்குநர் ப.நீலகண்டன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பெரியார் ஈ.வெ.ரா.வின் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளில் ஒன்றான கைம்பெண் மறுமணம் குறித்துப் பட்டுக்கோட்டையில் முருகப்பா உரையாற்றிக் கொண்டிருந்தபோது, மரகதவல்லி என்ற கணவனை இழந்த இளம்பெண் மேடைக்கு வந்து, 'பேச்சாளர், கணவனை இழந்த பின் வயதுக்கு வந்த என்னை மறுமணம் செய்து கொள்வாரா?' என்று கேட்டார். உடனே முருகப்பா இசைவு தெரிவித்தார்.

29.6.1929-இல் திருப்பரங்குன்றத்தில் பெரியார் ஈ.வெ.ரா. முன்னிலையில் முருகப்பா – மரகதவல்லி திருமணம் நடைபெற்றது.

1932-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து, 'சண்டமாருதம்' என்னும் இதழ் சுயமரியாதை இயக்கத்தை வளர்ப்பதற்காகவே முருகப்பாவால் நடத்தப்பட்டது.

இளம் பெண்களுக்குக் கல்வி கற்பித்து, கைத்தொழில் பயிற்சி தந்து, வாய்ப்பிருப்பின் மறுமணமும் செய்து வைக்கும் நோக்கத்துடன் முருகப்பாவும் மரகதவல்லி அம்மையாரும் இணைந்து காரைக்குடியை அடுத்த அமராவதிபுதூரில் 10.4.1938 அன்று 'மகளிர் இல்லம்' என்ற அமைப்பை நிறுவினர். அதனை அன்றையக் கல்வி அமைச்சர் டாக்டர் சுப்பராயன் திறந்து வைத்தார்.

அவ்வமைப்பின் சார்பில், 'மாதர் மறுமணம்' என்ற திங்கள் இதழும் வெளியிடப் பெற்றது. மழலையர் பள்ளி ஒன்றும் தொடங்கப்பட்டது. அப்பள்ளியை 30.8.1939-இல் விபுலானந்த அடிகள் திறந்து வைத்தார்.

'மகளிர் இல்லம்' முருகப்பாவுக்குப் பின்னரும் மரகதவல்லி அம்மையாரால் தொடர்ந்து நடத்தப்பட்டது. மரகதவல்லி அம்மையார் காலத்துக்குப் பின்னர் அது செயல்படவில்லை.

'மகளிர் இல்லம்' இருந்த வளாகத்தை

## முருகப்பா குறித்து சான்றோர்களின் கருத்துகள்

- 'சமுதாயச் சீர்திருத்தத்திலும், தமிழ் வளர்ச்சியிலும், முருகப்பா அவர்கள் பெரும்பணி செய்திருக்கிறார்கள். என்னுடைய பாராட்டை வெகுநாட்களுக்கு முன்னமேயே பெற்றவர்.'

  –முதறிஞர் இராஜாஜி

- 'அன்பர் முருகப்பா, நேர்மையான உள்ளமும், தெளிவான பேச்சும் உடையவர். தோன்றுவதைத் தோன்றும்படியாகவே சொல்வதில் நயமிருக்கும். ஒன்றை அளவு கடந்து புகழ்வதும் இகழ்வதும் அவரிடம் காண இயலாதவை.'

  –வாகீச கலாநிதி கி.வா.ஜ.

- 'செட்டி நாட்டில் இன்று கல்வி ஆர்வமும், சேவை உணர்ச்சியும், சீர்திருத்த மனப்பான்மையும், பல நல்ல பேச்சாளர்களும் உள்ளனர் என்றால் அனைத்திற்கும் மூலகாரணம் முருகப்பரே.'

  –கம்பனடிப்பொடி சா.கணேசன்

*'முதிர்ந்த அறிவும் துடிப்புள்ள எழுத்தும் உடையவர் முருகப்பா.'*

**–ஜெமினி எஸ்.எஸ்.வாசன்**

*'தென்னாட்டு இராஜா ராம்மோகன் ராய் முருகப்பா. பழமையை வெறுத்து, பயனற்றவற்றை ஒதுக்குவதிலும், புதுமையைக் கற்றுப் பொன்னானவைகளைக் கைக்கொள்வதிலும் முருகப்பாவுக்கு இணை முருகப்பாதான். அவரது வாழ்க்கை வரலாறு இந்நாட்டுச் சீர்திருத்த வரலாறாகும்.'*

**–தமிழறிஞர் டாக்டர் தமிழண்ணல்**

*'முருகப்பா மிகச் சிறந்த பண்பாளர். காந்திய நன்னெறியில் கருத்துடையவர். நாகரிகம் தவறாத நட்பாளர். இனிய முகமும், இன்சொல்லும், எளிமையும் அவருடைய சிறப்புகளில் சிறந்தன. பாரதியாரைப் பாராட்டி ஆதரிக்கும் பாக்கியம் பெற்றவர்.'*

**–நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை**

*'இரும்பு நெஞ்சம் படைத்தவர். சமூக விஷயத்தில் வந்த எதிர்ப்புகளைக் கண்டு மனம் இடிந்து போய்விடாமல் வெற்றி கண்டவர்.'*

**–நீலாவதி இராம.சுப்பிரமணியம்**

*'ஆராய்ந்து பாருங்கள். அறியாமை எல்லோருக்கும் பொது. அறிவும் ஆராய்ச்சியும் எல்லோருக்கும் பொது. என்னுடைய இந்த முயற்சியும் பொதுவேயாகும்' என்பது கம்பர் காவிய முகவுரை. புரட்சி வாய்ந்த முருகப்பாவின் நெஞ்சம் எத்துணை பணிவுடையது, நேர்மையுடையது, இனிமை செறிந்தது என்பதனை இம் முகவுரை காட்டும்.*

**–தமிழறிஞர் வ.சுப.மாணிக்கனார்**

*'என் பாடல்கள் முதலில் பத்திரிகையில் வெளிவந்தது சொ.முருகப்பா அவர்களது பத்திரிகையான குமரனில்தான். ஆசிய ஜோதி நூலை வெளியிடத் தூண்டி, அதற்கான ஆங்கில முதனூலை எனக்கனுப்பி ஊக்குவித்தவர்களும் அவர்களே.'*

**–கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

*8. 10. 1986–இல் பள்ளத்தூர் மு.அ.பழனியப்ப செட்டியார் குடும்பத்தினர் வாங்கிக் கொண்டு, அவர்கள் பள்ளத்தூரில் நடத்தி வந்த ஸ்ரீசாரதா சேவாஸ்ரமம் என்னும் மகளிர் சேவை நிறுவனத்தை அவ்வளாகத்துக்கு மாற்றினர்.*

*அச் சேவை நிறுவனத்தின் நிர்வாகம் 1994–இல் சேலம் ஸ்ரீசாரதா சமிதியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்ரீசாரதா சமிதி அவ் வளாகத்தில் ஸ்ரீசாரதா நிகேதன் மகளிர் கல்லூரியை நிறுவியுள்ளது.*

*கம்பருக்கும் செட்டிநாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கம்பர் சமாதி செட்டிநாடு ஊர்களில்ஒன்றானநாட்டரசன்கோட்டையில்தான் உள்ளது. அது தவிர அங்கு கம்பர் பற்றிய நடுகல், கம்பர் செய், கம்பர் குளம், கம்பர் ஊருணி ஆகியவையும் உள்ளன. அப்பகுதியில் வாழ்ந்த முத்துநாயகப் புலவர் 1775–இல் இயற்றிய பாடல் மூலம் கம்பருக்கும் நாட்டரசன்கோட்டைக்கும் உள்ள தொடர்பை நன்கு அறியலாம்.*

*அப்பாடல்:*

**வாசமான தென்பாண்டி நன்னாடு**
**மதுரை நாட்டில் வளருமிந்நாடு**
**காசினிக்குட் கதிர்க்கின்ற நாடு**
**முன்கம்பர் வந்து துதிக்கின்ற நாடு**
**பூசுரர்க் கன்னதானம் செய்நாடு**
**புலவர் மேல பிமானம் செய்நாடு**
**ராச லட்சுமி கண்ணுடை யாளருள்**
**நல்கு நாட்டரசன் கோட்டை நாடே**

*முருகப்பா கம்பராமாயணத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளையின் இராமாயணம் பற்றிய கட்டுரைகளை 'குமரன்' இதழில் வெளியிட்டார். கம்பருடைய இராம காதை தெளிவான உருப்பெற வேண்டும், அதன் பயனை எல்லா மக்களும் பெற வேண்டும் என்பது முருகப்பாவின் குறிக்கோள். எனவே கம்பராமாயணப் பதிப்பு சம்பந்தப்பட்ட பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு வாழ்நாளின் இறுதிப் பகுதியில் 1950 முதல் 1956 வரை அயராமல் உழைத்தார். கதைக் கோவை அறாதபடி 3251 பாடல்களைத் தேர்ந்தெடுத்துச் சொற்பொருள், பொழிப்புரை, பாநயம் ஆகியவற்றுடன் இராம காதை என்னும் பெயரில் வெளியிட்டார். அப் பதிப்பின் இரு பகுதிகள் வெளிவந்தன.*

*பண்டிதமணியின் முன்னுரை, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் அணிந்துரை ஆகியவற்றோடு இராம காதை பாலகாண்டம் 1953–ஆம் ஆண்டிலும், தமிழ்க்கடல் இராய.சொக்கலிங்கனாரின் அணிந்துரையுடன் இராம காதை அயோத்தியா காண்டம் 1956–ஆம் ஆண்டிலும் வெளியிடப்*

பட விளக்கம்:

1. அ.மு.க.மு.க. ரெங்கநாதன் செட்டியார்,
2. இராய.சொக்கலிங்கன்,
3 மகாகவி சுப்பிரமணிய பாரதியார்,
4.சொ.முருகப்பா,
5. கி.நாராயணன் செட்டியார்,
6 நிற்பவர், மு.நடராசன்.

*– 9.11.1919–இல் எடுத்த படம்*

*படம் உதவி:*
*காரைக்குடி நாராயணன்*

பெற்றன.

இராம காதைக்கு முன்னுரை போல 'கம்பர் காவியம் – அதன் நிலை விளக்கம்' என்ற நூலைப் படைத்தார். அது 'கம்பராமாயணச் சீரழிவை வெளிப்படுத்தும் அரிய ஆராய்ச்சி நூல்' எனக் கருதப்படுகிறது.

1938–ஆம் ஆண்டில் காரைக்குடியில் கம்ப னடிப்பொடி சா.கணேசனார் கம்பன் கழகம் தொடங்குவதற்கு, முருகப்பா உற்ற துணையாக இருந்துள்ளார்.

மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில் முதலிய 14 திருக்கோயில்களின் திருப்பணியாளர்களான அமராவதிபுதூர் வயிநாக ரம் குடும்பத்தில் தோன்றிய மகாவித்துவான் வயி நாகரம் அ.இராமநாதன் செட்டியாருடன் முருகப் பாவுக்கு நல்ல நட்பு இருந்தது.

ஒருமுறை, முருகப்பா வயிநாகரம் வீட்டுக்கு சென்றபோது, தண்ணீர்க் கூசா எடுத்துச் சென்றி ருந்தார். திரும்பும் வேளையில் அதனை எடுத்துச் செல்ல மறந்துவிட்டார். அது குறித்து வயிநாகரம் இராமநாதன் செட்டியார் முருகப்பாவுக்கு ஒரு பாடல் மூலம் தெரிவித்துள்ளார்.

அப்பாடல்:

**கூசாது பேரறங்கள் செழுந்தமிழில்**
**எடுத்துரைக்கும் குணத்தின் மிக்காய்;**
**நீசாது போல்எழுந்து நென்னல்விடி**
**காலையிலே நீங்கிச் சென்றாய்!**
**பேசாது போவதுண்டோ? முருகப்ப**
**நன்மணியே! பேச்சு வல்லாய்!**
**கூசாதுப் புரவாக விளக்கியிங்கே**
**வைத்துள்ளோம் கொடுப்போம் என்றே.**

முருகப்பா தமிழிசை இயக்கத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு முன்னணியில் நின்று தொண்டு புரிந்ததுடன், காரைக்குடியில் ஆண்டுதோறும் தமி ழிசை மூவருள் ஒருவரான முத்துத் தாண்டவர் விழா வைச் சிறப்புற நடத்தியுள்ளார்.

முருகப்பா பாரதியார்பால் மிகுந்த பற்றுடை யவர். பாரதியார் எல்லோரையும் 'பாண்டியா' என அழைத்ததன் தாக்கத்தால், தன் மகனுக்கு வீர பாண்டியன் என்று பெயரிட்டார்.

உயிர்க் கொலையைத் தடுப்பதற்கு ஊர் ஊராகச் சென்று, சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

முருகப்பாவின் புனை பெயர் 'அஞ்சா நெஞ் சன்'.

நகரத்தார்கள் கிராப்பு (Crop) வைத்துக் கொள் வது தவறு என்ற ஒரு நிலை ஏற்பட்ட சமயம், முரு கப்பா அதனை எதிர்த்துப் போராடினார்.

வாழ்நாள் முழுதும் சமூகச் சீர்திருத்தத்துக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பெண்களின் முன் னேற்றத்துக்கும் உரிமைக்கும் பாடுபட்ட முருகப்பா, சென்னையில் 20.6.1956–இல் மறைந்தார்.

சீர்திருத்தச் செம்மல் பற்றிய ஒரு வெண்பா:

**சீர்திருத்த முற்றுநம் செட்டிமக்கள் வாழ்வுயர**
**ஆர்வத்தோ டோயா தரும்பணிகள் – சோர்வின்றி**
**என்றும் புரிந்திருந்த ஏந்தல் முருகப்பா**
**குன்றொளிரும் தீபமெனக் கொள்.**

<u>உதவிய நூல்கள்:</u>


*1. நகரத்தார் கலைக் களஞ்சியம் – பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன்*

*2. செட்டிநாடும் செந்தமிழும் – சோமலெ*

*3. தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள் – குன்றக்குடி பெரியபெருமாள்*

*4. நகரத்தார் பெருமை – வெற்றியூர் அரு. சுந்தரம்*



*மேற்குறிப்பிட்ட நூல்களின் ஆசிரியர்களுக்கும் பதிப்பாளர் களுக்கும் மனம் நிறைந்த நன்றி.*

# தேனும் ஆரோக்கியமும்

தேன் ஒரு டானிக் மற்றும் ஆரோக்கியமும் கூட. இது எளிதில் ஜீரணமாகி விடும். உடலில் இது எளிதில் கலந்து விடும். ஊட்டச்சத்து மிக்க இயற்கையான உணவும் இதுவே. வலுவிழந்த இருதயம், மூளை மற்றும் வயிற்றிற்கு சக்தியை வழங்குகிறது. மாற்றம் ஏதுமின்றி ரத்தத்தோடு, தேன் அப்படியே கலந்து விடும். இரத்த ஓட்டத்தில் தேன் நேரிடையாகக் கலந்துவிடும். இது ஜீரணிக் கப்படத் தேவையில்லை. தேனில் 'லெவலோஸ்' (Levulose), க்ளூகோஸ் (Glucose), புரதம், இரும்பு மேலும் முக்கியமான ஊட்டச்சத்துக்கள் உள்ளடங் கியுள்ளன.

உடலில் உள்ள தாதுக்கள் எத்தனையோ அத்தனையும் தேனில் பொதிந்துள்ளன. ஜீரண மாகும் நிலையில் 80 சதவிகித ஊட்டச்சத்து அடங் கியுள்ளது. 'என்ஸைம்கள்' மற்றும் 'பார்மிக் ஆசிட்' ஆகியவை தேனில் உள்ளன. தேனில் உள்ள என்ஸைம்கள் செரிமானம் ஆகாத உணவு வயிற்றிலும், சிறுகுடலிலும் தேங்கி இருந்தால், அவற்றை உடலோடு கலக்கத் தேவையான பணிகளை இது செய்கிறது.

குழந்தைகளுக்குத் தேனைக் கொடுத்தால், மலச்சிக்கல் இராது. இருமல் உள்ளபொழுது இதனைக் கொடுத்துக் குணப்படுத்தலாம். உட லுக்குத் தேன் மிகுந்த சக்தியைக் கொடுக்கும். மூளை மற்றும் கைகள் மிக நல்ல முறையில் பணியாற்ற, அதிக அளவு ஊக்கத்தை இது கொடுக் கும்.

இருதயத்தை இயக்கும் சக்தி தேனுக்கு உண்டு. சத்து குறைவான காலத்தில் தேனைச் சாப்பிடலாம். இது கிருமிகளைக் கொன்று, உடல்நலத்தைக் காக்கும்.

சுறாமீன் எண்ணெய் மற்றும் ஆரஞ்சு சாறுக்குப் பதிலாகத் தேனை எடுத்துக் கொள்ள லாம். தொண்டை கரகரப்பு, தொண்டை வலி மற்றும் இருமல் இருக்கும் காலங்களிலும் தேனைச் சாப்பிடலாம்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள்கூடத் தேனைச் சாப்பிடலாம். தேன் தொண்டை கரகரப்பைப் போக்கி, குரலை இனிமையாகவும், வளமானதா கவும் மாற்றி விடும். குழந்தைகளுக்கு உடலில் வெப்பம் மற்றும் சக்தியைக் கொடுப்பதற்கும் தேன் கொடுக்கப்படுகிறது.

பாலோடு தேனைக் கலந்து சாப்பிடலாம். ஆஸ்த்மா நோயாளிகளுக்கு ஒரு தேக்கரண்டி தேனை, ஒரு குவளை சூடான வெந்நீரில் கலந்து கொடுத்தால், அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும். இது புத்துணர்ச்சியையும், சக்தியையும் கொடுக் கும் டானிக் ஆகும். உடல் நலிவுற்றுத் தேறி வருபவர்களுக்குத் தேனைக் கொடுத்தால், அவர்களது உடலில் ஒரு புத்துணர்ச்சி கிளம்பும். உடலுக்கு ஊக்கத்தைக் கொடுத்து ஆரோக்கியத்தை நல்கும்.

உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் தேனை சாப் பிட்டால் சமநிலை பெறு வார்கள்.

**—ஸ்ரீ சுவாமி சிவானந்தா**

ஞா. மாணிக்கவாசகன்

# ஊழில் பெருவலி யாவுள?

காவிரிக் காவலனான சோழ மன்னன், கங்கைக் கரை வரை படை நடத்திச் சென்று, கங்கையையும் தனதாக்கிக் கொண்டான் என்றாலும், அவனை விட்டுப் பிரியாது, காவிரியே, நீ அவனுடனேயே இருக்கிறாய். இதற்கு என்ன காரணம் என்றால், இது கற்புடைப் பெண்களின் பொற்புடைக் குணம் என்பதை நான் அறிவேன். காவிரிப் பெண்ணே வாழ்க என்று பாடினான்.

நதிகளைப் பெண்களாக உருவகிப்பது கவிஞர்கள் வழக்கம். எனவே சோழ மன்னன் தனக்குச் சொந்தமான காவிரி இருக்க, கங்கை என்று வேறொரு பெண்ணையும் தேடிப் போய் அடைந்தான். இதனைக் கண்டும் காவிரி அவனோடு கோபிக்காது இருக்கிறாள். இதற்குக் காரணம், கற்புடைப் பெண்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்னும் பொருள்படத் தன்னை மறைமுகமாகத் தாழ்த்தித் தன் மனைவியாகிய கண்ணகியை உயர்த்திப் பாடியிருக்கிறான் கோவலன் என்று நினைத்துவிட்டாள் மாதவி. அதாவது கண்ணகியை விட்டுத் தன்னிடம் வந்துவிட்டாலும், கண்ணகி, காவிரி போலப் பொறுமையாக இருப்பதன் காரணம், அவளின் கற்பு நிலை என்று பாட்டின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்டு, தானும் இதுபோல அவனுக்குப் பதிலடி பாட்டாகவே தரவேண்டும் என்று முடிவெடுத்தவளாய், கோவலனிடம் இருந்த வீணையை வாங்கித் தானும் பாடலானாள் மாதவி.

"அலைதரு கடலே! விரிமணல் கரையே! நறை தரு மலரே! மலர் தரு மணமே! மயக்கும் மாலைப் பொழுதே, என்னையும் என்பால் வைத்த அன்பையும், குதிரைகள் பூட்டிய தேரையும் விட்டு விட்டுப் போய்விட்டாரோ, தலைவர்? அவர் எம்மை விட்டுப் போனாலும் நாம் அவரை விட்டுப் போகமாட்டோம், செங்கால் நாராய் நீ இங்கெதற்கு வந்தாய்? நான் படும் துயரை அவரிடம் போய்ச் சொல்லாத அன்னப் பறவையே, நீயும் இனி இங்கு வராதே. மயக்கும் மாலைப் பொழுதேன் வருகிறது? நிலவு நெருப்பாய்ச் சுடுகிறது. தென்றல் தீயாய் வருத்துகிறது" – என்று தலைவனைப் பிரிந்த தலைவி எப்படி எல்லாம் துன்பப்படுவாள் என்பது போல உருவகித்து, வீணையை மீட்டி, வீணை இசையோடு தன் குரலிசையும் கூடிக் கலக்கப் பாடினாள். 'வாழ்வார்க்குச் சீதேவி வாக்கிலே' என்ற பழமொழி நிசமானது போல, இவள் நினைத்துப் பாடியதெல்லாம் இவளுக்கே வாய்த்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாததால் வந்த வினை – விதி செய்த சதி இது. மனைவியை வாழ்க்கைத்துணை என்று மட்டும் சொல்லவில்லை வள்ளுவம்; வாழ்க்கைத் துணை நலம் என்று கூறிப் போற்றுகிறது, மனைவியின் மாண்பை. தாலி கட்டிக்கொண்ட மனைவி எனில் கணவன் தவறைப் பெரிதுபடுத்த மாட்டாள். முரண்பட மாட்டாள். பெரும்பாலும் ஒத்துப் போவாள். தாலி கட்டிய கணவனும் மனைவியிடம் குறைகாண முற்பட மாட்டான். சிறுகுறை ஏதேனும் இருந்தாலும் அது அவள் இயல்பு போலும் என்று இருந்து விடுவான். இங்கே கோவலன் மாதவிக்குத் தாலி கட்டிய கணவனும் அல்ல; மாதவி கோவலனுக்குத் தாலி கட்டிக்கொண்ட மனைவியும் அல்ல.

புகார் நகரிலே நாடாளும் மன்னனுக்கு ஈடான செல்வச் சிறப்போடு வாழ்ந்த மாசாத்துவான் மகன் கோவலன்.

ஆடற்கலை அரசி சித்திராபதி பெற்ற மகள் மாதவி. தேவருலக ஊர்வசிக்கு ஒப்பானவள். இவளின் நடன அரங்கேற்றம் நடைபெற்றபோது, அப்போது அந்நாட்டு மரபுப்படி மன்னன் மாதவிக்கு தலைக்கோல் பட்டமும், பச்சைமாலையும்

ஆயிரத்தெட்டு கழஞ்சுப் பொன்னும் பரிசாக வழங்கினான்.

மாலையைப் பரிசாகப் பெற்ற மாதவி, ஆயிரத்தெட்டு கழஞ்சு பத்தரை மாற்றுப் பொன் மதிப்புடைய மாலை, இதை விலை கொடுத்து வாங்குவோர், மாதவிக்கு மணாளனாவார் என்று கூறி, தன் பணிப்பெண் ஒருத்தியிடம் மாலையைத் தந்தனுப்பினாள் மாதவி. அவளும் அரங்கிலும் வீதிகளிலும் சென்று மாலை விலை கூறிக் கூவினாள். அவ்வளவு பணம் கொடுத்து மாலையை வாங்கிடுவார் இல்லை என்பதை உணர்ந்த அப் பணிப்பெண் பார்வையில், இதை வாங்கும் வசதி படைத்த செல்வர் இங்கு யாருமே இல்லையா என்று எள்ளி நகையாடுவது போலக் கோவலனுக்குத் தோன்றவே, அவனின் குலப்பெருமை, குடிப்புகழ், குன்றாச் செல்வ வளம் எல்லாம் குதிபோட்டுக் கொண்டு அவன் முன் கூத்தாடின (ஆட வைத்தது விதி). எனவே ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து மாலையை வாங்கினான். அடுத்த நொடி, இவனே மாதவியால் வாங்கப்பட்டவனாக, அவள் பின்னே போனான். போனவன் போனவனே ஆனான், கட்டிய மனைவியை மறந்து.

ஊழ்வினை வந்து உறுத்த, விதி கோவலனுக்கு மாலை மாதவி உருவில் ஒரு விலங்காய் வாய்த்து விட்டது. முயன்றால் ஊழையும் வெல்லலாம் என்று பாடிய திருவள்ளுவர்கூட, ஊழ் என்று ஓர்

அதிகாரமே வகுத்து, ஒன்பது குறட்பாக்களைப் பாடி முடித்த பிறகும், பத்தாவது பாட்டில் 'ஊழில் பெருவலி யாவுள?' என்று பெருமூச்சு விடுகிறார். விதி வலிது, அதை வென்று விடலாம் என்று முயன்று ஒன்றைச் செய்தால், அது நமக்கு முன்னே அங்கே போய் நின்று, தன் வேலையைக் காட்டும் என்கிறார் என்றால், விதி எவ்வளவு வலிமை உடையதாக இருக்க வேண்டும்? இதன் இந்த வலிமைதான் கோவலனை, மாதவியிடம் இழுத்துச் சென்றது.

திருவெண்காடு சிவநேசர் பெற்ற பிள்ளை திருவெண்காடர் என்னும் பிள்ளைத் திருநாமமே பின்னர் பட்டினத்தார் என்றானது. கடல் கடந்து கப்பல் வணிகம் செய்த பெருஞ்செல்வர். பெருஞ் செல்வத்தைத் துறந்து, 'உடை கோவணம், வீடு நமக்குத் திருவாலங்காடு' என்று துறவு மேற் கொண்ட பட்டினத்தார், விநாயகர் கோவில் ஒன் றின் முன் அமர்ந்து, தவயோகத்தில் தன்னை மறந்து தியானத்தில் இருந்தார்.

அப்போது அரண்மனை சென்று திருடிய கள்வர்கள், ஒரு மணிமாலையை, பட்டினத் தார் கழுத்தில் போட்டுவிட்டு, காவலர் பின் தொடர்வதைக் கண்டு இருட்டில் மறைந்தனர். கள்வரைப் பிடிக்க வந்த அரண்மனைக் காவலர், கழுத்தில் முத்துமணிமாலையோடு இருக்கும், பட்டினத்தாரை, அரண்மனை நகைத் திருடர் இவரே – இங்கு நல்லவர் போல வேடம் போடுகிறார் என நினைத்து, இழுத்துக் கொண்டுபோய், மன்னர் பத்திரகிரி முன் நிறுத்த, அவனும் கள்வனைக் கழு வில் ஏற்றுக என்று கட்டளை இட்டான். காவலர் கள் பட்டினத்தாரை, கழுவில் ஏற்றிக் கொல்லக் கொலைக்களம் அழைத்துச் சென்றனர். தவயோக நிட்டை கலைந்த பட்டினத்தார், கழுமரத்தை நிமிர்ந்து பார்த்தார். இது என் செயலால் வந்ததல்ல. முன் செய்த தீவினை மூண்டெழுந்து நிற்கிறது, இதுவும் ஈசன் செயலே என நினைந்து,

**என் செயலாவது யாதொன்று மில்லை இனித் தெய்வமே**
**உன் செயலென்று உணரப் பெற்றேன் இந்த ஊன் எடுத்த**
**பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு**
**முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே**

என்று பாட கழுமரம் தீப்பற்றி எரிந்தது. சேதி கேட்ட மன்னன் ஓடோடி வந்து பட்டினத்தார் காலில் விழுந்து கதறினான். மன்னிக்கக் கேட்டு மன்றாடினான். அவருக்குச் சீடனும் ஆயினான்.

இந்தப் பிறவியில் நான் யாதொரு தவறும் செய்யவில்லை. இது முன்பிறவியில் நான் இழைத்த தவறுக்குத் தண்டனை என்று முற்றும் துறந்த பட்டினத்தாரே ஏற்றுக்கொள்கிறார் என்றால், மற்ற வர்கள் எம்மாத்திரம்? வினைப் பயன் பிறவிதோறும் தொடரும் என்பதையே புராணக் கதைகள் மட்டு மல்ல, இலக்கியங்களும் இதிகாசங்களும்கூட எடுத் துச் சொல்கின்றன.

கோவலன், மாதவி தன் கானல் வரிப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு போல் பாடியதில் ஏதோ உட்பொ ருள் உள்ளதாக எண்ணினான். மாதவியும் கோவ லன் சோழ மன்னன் கங்கையை உரிமையாக்கிக் கொண்டாலும், காவிரியை மறவாதிருக்கிறான். காவிரியும் அவனோடு நீங்காதிருப்பாள் என்று பாடி, தான் மாதவியோடு இருந்தாலும், என்றும் சோழனுக்குக் காவிரி போலக் கண்ணகிக்கு உரிய வன் என்று குறிப்பு காட்ட இப்படிப் பாடினான் என்று நினைத்து, அவளும் தலைவன் தலைவி பிரிவுத் துயர் பற்றிப் பாடியதை, இவனும் மாதவி வேறு யாரையோ மனதிலிறுத்திப் பாடுகிறாள் என்றும் ஐயம் கொண்டது, எல்லாமே விதியின் விளையாட்டேயாகும். அவரவர் பாடியதன் பொருள் குறித்துப் பேசியிருந்தால் பிளவு நிகழ்ந் திருக்காது. உறவும் முறிந்திருக்காது. வினைப் பயன் இருவரிடையேயும் வீணை இசையால் வந்திறங்கிய இடியாயிற்று.

தன் கையைப் பற்றியிருந்த மாதவியின் கையை உதறிவிட்டு, எழுந்த கோவலன், நேரமாகிவிட் டதா... இல்லம் திரும்பலாமா? என்று மாதவி கேட்டதையும் கவனியாது, தனியே புறப்பட்டுப் போனான். கோவலன் மாதவியை விட்டுவிட்டுத் தனியே புறப்பட்டுப் போனதும் தோழிப் பெண்கள் ஆட்டமும் பாட்டமும் அடங்கிப் போனது. மாதவியும் மனம் சோர்ந்த நிலையில் வண்டியி லேறித் தன் வளமனை அடைந்தாள்.

கோபித்துக்கொண்டு போன கோவலனைத் தடுத்து நிறுத்த மாதவி முயன்றிருக்கலாம். செய்ய வில்லை. எங்கே போய்விடப் போகிறார். இன்றில் லையெனில் நாளை, நாளை இன்றேல் மறுநாள் வருவார் என்று எதிர்பார்த்திருந்தாள்.

மாளிகை மாடத்துக்குச் சென்று மகர யாழை எடுத்து வைத்துக்கொண்டு மீட்டினாள். யாழிசை யோடு குரலிசை பொருந்த மறுத்தது. பாட்டு சலித்து, மனம் பாட மறுத்தது.

யாழைத் தூக்கித் தனியே வைத்தவள், மனத் துள் கோவலனைச் சமாதானப்படுத்த என்ன செய்யலாம் என்று யோசித்தவள் கண் முன்னே



# அறங்கள்

- அன்பாய் இருப்பது அறம்.
- இனிமையாய் பேசுவது அறம்.
- கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது அறம்.
- நல்லதையே நாடுவது அறம்.
- மனதில் குற்றமற்று இருப்பது அறம்.
- பொய்யைத் தவிர்ப்பது அறம்.
- சினத்தைத் தவிர்ப்பது அறம்.
- பொறாமை உணர்ச்சியைத் தவிர்ப்பது அறம்.
- பிறருக்குக் கெடுதல் செய்யாமை அறம்.
- பிறருடன் பகிர்ந்து உண்பது அறம்.
- பிற உயிர்களைக் கொல்லாமை அறம்.
- தீமையில்லாத வழியில் பொருளீட்டுவது அறம்.
- இல்லற வாழ்வில் ஈடுபடுவது அறம்.
- அற நூல்களைக் கற்று, அடக்கமுடன் இருப்பது அறம்.
- தூய துறவியரைப் பேணுவது அறம்.
- மானத்துடன் வாழ்வது அறம்.
- உயிருக்கு ஊக்கம் தருவது அறம்.

**–உமையாள், திருச்சி.**

தூக்கி நிறுத்தப்பட்டிருந்த கதம்பமாலை தெரிந்தது. காதல் கடவுள் மன்மதன் மலர் அம்புகளைத் தானே எய்கிறான் காதல் உணர்வூட்ட. எனவே, நாமும் அந்த மலரம்புகளை மடலாக்கி, நம் மனத்தை எழுத் தாக்கி அனுப்புவோம் என்று நினைத்தாள்.

செண்பகம், மாதவி, மரு, மருக்கொழுந்து, இருவாட்சி, மல்லிகை, செழுங்கழுநீர்ப் பூக்கள் தொடுக்கப்பட்ட பலவகையான மணம் வீசும் மலர்களுக்கிடையே தொடுக்கப்பட்டிருந்த வெண் ணிறத் தாழை மடலை எடுத்து, செண்பகப் பூவின் கூரிய மொக்கை எழுத்தாணியாகக் கொண்டு, தாழை மடல் ஏடாக மாதவி எழுதினாள்:

'உலகத்து உயிர்கள் எல்லாம் இன்புற்றிருக்கும் இளவேனில் காலமிது! காதல் இளவரசன் தென்றல் தேரேறி வருகின்ற காலம் இது! மயக்கும் மாலைப் பொழுதும் வந்துவிட்டது. போதாக்குறைக்கு பூரண நிலவு வானில் பொலிகிறது! பொலியும் நிலவு பொழியும் தண்ணொளி பிரிந்தவர் மனத்தை நெருப்பாய்ச் சுடுகிறது!

கூடிக் களித்தவர் கொஞ்சம் பிரிந்தாலும், பிரிந் தவர் கூடி இருந்தவரை மறந்தாலும், இதுதான் ஏற்ற சமயம் என்று மன்மதன் மலர் அம்புகளைப் பொழிந்து அவர்கள் உயிர் கொல்லும் எமனாகி விடுகிறான் என்பதை அறிக!'

என்று எழுதிய மடலை, தன் தோழி வசந்த மாலையை அழைத்து, "மடலைக் கோவலனிடம் கொண்டு சேர்க்க" என்று கொடுத்தனுப்பி னாள்.

"நெற்றித் திலகமும் நீண்ட கருங்கூந்தலும், குவளைமலர்க் கண்ணும் குமிழப் பூ மூக்கும், கொவ் வைக் கனி உதடும் கொண்ட உன் தலைவி என்மேல் காதல் கொண்டது போலப் பார்த்ததொரு நாடகம்,

விருப்போடு பார்த்து, வெள்ளப்பாகு போலத் தித்திக்கப் பேசி, ஆடியதொரு நாடகம்,

அந்தி மாலை வந்து வருத்தும் துன்பத்தில் துடிப்பது போல நடிக்குமொரு நாடகம்,

காலில் சிலம்பொலிக்க இடை துவள, என்னை மயக்கி, நான் படும் துயர் காணாது போனதொரு நாடகம்,

பூந்தாதுதிர்க்கும் மலர்மாலையும், மணிமாலை யும் பூமார்பும் பொலியும் உன் தலைவி என் மனம் வருந்த இருபொருள் தரப் பாடிய பாட்டு நாடக மும்,

நான் அவளைப் பிரிந்ததால் என் பிரிவால் அவள் வருந்துவது போல ஆடிய நாடகமும், எல்லாமே நாடகம்தான் என்பதை நான் அறிவேன்.

இதெல்லாம் உன் தலைவிக்குக் கைவந்த கலை. காரணம், அவளே ஒரு நாட்டியக்காரிதானே!" என்று கூறி, மாதவி அனுப்பிய மடலை, அவளிடமே திருப்பித் தந்து அனுப்பினான் கோவலன்.

**–ஒலிக்கும்**

# நிதி பராமரிப்பில் நிதியில்லா விவர பராமரிப்பு

## (Documentation)




### 6

கடந்த சில இதழ்களில் வரி சேமிப்பு, தங்க முதலீடு, சிறுக சேமிப்பு, பரந்த முதலீடு பற்றி பார்த்தோம். இவற்றில் சிலர் முதலீடு செய்து இருக்கலாம். உங்கள் முதலீடு பெருக வாழ்த்துக்கள். புதிதாக முதலீடு செய்ய முனைபவர்கள் இருக்கலாம். முன்னர் முதலீடு செய்தவர்களுக்குத் தெரியும், இதற்கு சற்று மெனக்கெட வேண்டும் என்று.

நிதி முதலீடுகள் காலையில் கடையில் சென்று பருப்பு வாங்குவது போல் எளிது இல்லைதான். பருப்பு விலை ராக்கெட்டில் போனாலும், ராக்கெட் விலை கொடுத்தால் பருப்பை கொடுத்து விடுவார்கள். இன்றைய நிலவரத்தில் பருப்பு வாங்க பான் (PAN) நம்பர் கேட்பதில்லை. போற போக்கில் கேட்டாலும் ஆச்சரியமில்லை. ஆனால் சர்வ நிச்சயமாக நிதி முதலீடு செய்ய, பான் நம்பர் மற்றும் பல விவரங்கள் கேட்பார்கள்.

பான் நம்பர் விவரம் பரவலாக அனைவருக்கும் தெரிந்ததுதான். புதியவர்களுக்காக, பான் நம்பர் என்பது, Permanent Account Number, இது வருமானவரி அலுவலகம் மூலம் வழங்கப்படுகிறது. ஒருவர் ஒன்றுதான் வைத்திருக்க வேண்டும்.

சரி, பான் நம்பர் வாங்கியாகி விட்டது, உடனே நிதி நிறுவனங்களில், நிதி சார்ந்த முதலீடு செய்து விடலாம், என்று நினைத்து விடாதீர்கள். காரணம், கறுப்பு பணம், இரகசிய அந்நிய செலாவணி, தீவிரவாத பணப் பரிமாற்றம், இவற்றையெல்லாம் தடுக்க மத்திய அரசாங்கம் பல விதிமுறைகளை விதிக்கிறது.

இதில் மிக முக்கியமானது KYC - Know your customer ஆகும். இதை ஒவ்வொரு முதலீட்டாளரும் பின்பற்ற வேண்டும். இதை முதலீட்டுக்கு முன் செய்ய வேண்டும். ஒரு முறை செய்தால் போதுமானது. இதற்கு பான் நம்பர், வண்ண புகைப்படம், சரியான விலாச அட்டை, திரும்பவும் கூறுகிறேன்; சரியான விலாச அட்டை, (இங்குதான் நிறைய பேருக்கு சிரமமே) ஆகியவை தேவை.

இந்த KYC இல்லாமல் யாரும் நிதி முதலீடுகள் செய்ய முடியாது. பரஸ்பர நிதி, பங்கு வர்த்தகம், தங்க முதலீடான அரசாங்க பத்திரம், சிறு சேமிப்பு, டீமாட் கணக்கு ஆக அனைத்திற்கும், ஆதியில் KYC வேண்டும்.

இதுவரை KYC செய்யவில்லை எனில், நிதி முதலீடு செய்ய KYC பதிவு பண்ணுங்கள். சில வருடங்களுக்கு முன் KYC இல்லாமல் முதலீடு செய்தவர்கள், கட்டாயம், இப்போது KYC செய்ய

வேண்டும். சில காலம் முன்னதாக KYC செய்து முதலீடு செய்தவர்கள், KYC Status தற்போதைய வழி முறைகளுக்கு ஏற்றவாறு உள்ளதா என்று பார்த்துக் கொள்ளுதல் நன்று.

KYC Status அறிந்து கொள்ள கீழ்க் கண்ட இணையதள முகவரியை அணுக லாம். (https://www.cvlkra.com/) உங்கள் பான் நம்பரை உபயோகித்து KYC Status அறிய லாம். இது சரியாக இல்லை எனில் KYC பதிவை அதற்கான படிவம் பூர்த்தி செய்து சரி செய்யலாம். இதைத்தான் ஆங்கிலத்தில் Non financial transaction என்று கூறுவார் கள். இதில் மெத்தனமாக இருக்காமல் சரி செய்வது, அடுத்த பரிமாற்றங்களை எளிதாக் கும், இல்லையெனில், அடுத்த பரிமாற்றங்கள் முடங்க வாய்ப்புகள் அதிகம்.

சரி அத்தியாவசிய KYC செய்தாகிவிட்டது, பான் நம்பர் உள்ளது, விலாசமும், சரியாக இருக்கிறது, "சிவனே" என்று இருக்கக்கூடாது. அத்தியாவசியமாகஇல்லாவிட்டாலும்,அவசி யமாக, சிலவற்றை செய்வது, சாலச் சிறந்தது. அவை பற்றி பார்ப்போம்.

முதலாவதாக கைபேசி எண்... இப்போது, எல்லோரும் கைபேசி வைத்திருக்கிறார்கள். இல்லாதவர்கள், கற்காலத்தை சேர்ந்தவர்கள் ஆகிவிட்டார்கள். இந்த கைபேசி எண்ணை நிதி நிறுவனங்களில் பதிவு செய்வது, நலம். இதன் நன்மை யாதெனில் வங்கிகளில் குறிப் பிட்ட தொகைக்கு மேல் பணப் பரிமாறு தல் நடந்தால் (உம். Rs. 5,000) நமக்கு குறுஞ் செய்தி வருமாறு செய்யலாம். தற்பொழுது கைபேசி மூலம் பலவகை சேவைகள் பெற முடியும். வங்கி மற்றும் பரஸ்பர நிதி பரிமாற்றங்கள், தற்போதைய பரஸ்பர நிதி, மதிப்பு ஆகியவற்றை கைபேசி மூலம் பெறலாம்.

அடுத்தது, மின்னஞ்சல் முகவரி... இது கைபேசி அளவு பரவியிராவிடினும், அனை வருக்கும், தெரிந்ததே. இதுவரை தனக்கென மின்னஞ்சல் முகவரி இல்லாவிடின், ஒன்றை அவசியம் பெற்றுக் கொள்ளுங்கள். மின் னஞ்சல் முகவரியை உங்களது எல்லா நிதி நிறுவனங்களிலும் பதிவு செய்யுங்கள். எந்த ஊரில் இருத்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும், நாம் விரும்பிய நேரத்தில் நிதி நிறுவனத்திற்கு நேரில் போகாமல், குறிப்பாக அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவைக்கு தொலைபேசியில் அழைக்கும் அவஸ்தை இல்லாமல், Mailback service மூலம் நமது கணக்கு பரிமாற்ற விவரம், இருப்பு, மதிப்பு ஆகியன எளிதாக அறிய முடியும்.

இன்னொரு பதிவைப் பார்க்கும் முன், தற்போதைய சமூக அமைப்பு பற்றி சில வார்த்தைகள். எனக்குத் தெரிந்தவரை, நிதி நிலைமை பற்றிக் கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும், தந்தை மகனுக்கும் கூறுவதில்லை. இதுகாறும் ஒருவருக்கொரு வர் நிதி நிலைமை பற்றிப் பேசுவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஓராயிரம் காரணங்கள் இருக்கலாம். இதன் விளைவு, முதலீடு செய்தவர்களுக்குப் பிறகு, அந்த சொத்து, சரியான நபர்களுக்கு போய் சேருவதில், பல சிக்கல்கள் அல்லது போய் சேருவதில்லை. இதுதான் நிதர்சனம்!

இந்த இடர்ப்பாடுகளை தவிர்க்க, நாம் கணக்கு துவங்கும் போதே, ஒருவருக்கு மேற் பட்டு, இருவராக கணக்கு துவங்கலாம். மேலும், கணக்கு துவங்கும் போதே அவர் களுக்குப் பிறகு அந்த சொத்து எத்தனை பேருக்கு எந்த விகிதில் போக வேண்டும் என்று பதிய வேண்டும். இதற்கு பெயர்தான் Nomination.

பரஸ்பர நிதி, பங்கு வர்த்தகம், தங்க முதலீடான அரசாங்கப் பத்திரம், சிறு சேமிப்பு, டீமாட் கணக்கு ஆக அனைத்திற் கும் Nomination செய்து விடுங்கள். இது நிறைய பேர் செய்யாதது, ஆனால் அவசியமானது! இதில் சிலருக்கு சிக்கல் இருக்கலாம். நமக் குப் பிடித்து, இன்று Nomination செய்த வர்கள், சில பல ஆண்டுகளில் பிடிக்காத வர்கள் ஆகிவிடலாம். இது மனித இயல்பு. இந்த மாதிரி தருணங்களில், நாம் Nomina tion–ஐ மாற்றி கொள்ளலாம். உங்களது காலம் வரை Nomination–ஐ எத்தனை முறை வேண்டு மானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

Nomination போட்டாகிவிட்டது, இத்து டன் வேலை முடிந்ததா? அதுதான் இல்லை! ஏன்? சற்று ஆழ்ந்து யோசி யுங்கள், விவரம் புரியும். இனி அது பற்றி விரிவாகப் பார்ப்போம்...

கண்ணன்

நம்மூரில் சில சீமை சமர்த்தர்கள் இருப்பார்கள். மேற்கூறிய எல்லாவற்றையும், பக்காவாகப் பதிந்து இருப்பார்கள். ஆனால், ஒன்று மட்டும் மறந்திருப்பார்கள், அல்லது வேண்டுமென்றே தவிர்த்திருப்பார்கள். இது எதிர்பார்த்த பலன் தராது, சொத்து சரியான நபருக்குப் போகாது. ஏனென்று யோசித்தீர்களா?

தெரிந்த சண்டைகள்தான்!! மனைவிக்கு Nomination செய்தால், மருமகள் போர்க்கொடி காட்டுவாள், ஏன் மகனைப் போடவில்லை என்று. மகனுக்குப் போட்டால் ஆத்தாளின் கதி அதோகதிதான். இந்த சிக்கலில் செட்டியார், சொத்து விவரம், Nomination செய்த விவரத்தை மனைவிக்கும், மக்களுக்கும் சொல்வதில்லை. விளைவு, முன்னர் பார்த்ததுதான். சொத்து விவரம் வாரிசுகளுக்குத் தெரியாமல் இருப்பதால், அது அவர்களுக்குப் பெரும்பாலும் போவதில்லை. இப்பொழுது புரிகிறதா... Nomination செய்தால் மட்டும் போதாது, சொத்து விவரம், Nomination விவரம் வாரிசுகளுக்குத் தெரிவது நல்லது. அல்லது அந்த நேரத்து சண்டைகளைத் தவிர்க்க, சொத்து விவரம், Nomination விவரம் வாரிசுகளுக்குப் பின்னர் தெளிவாகத் தெரியும்படி செய்யலாம், இது எவ்வளவு சரியாக நடக்கும் என்பது, அவரவர் அறிவுப்படி.

இன்னமும் தெளிவாகச் சொல்வதானால், உதாரணத்திற்கு செட்டியார் மகனை Nomination செய்யும்போது, மகனை அழைத்து அருகில் வைத்துகொண்டு, இந்த பரஸ்பர நிதி நிறுவனத்தில், இந்த திட்டத்தில், இவ்வளவு பணம், இந்தக் கணக்கில் உள்ளது என்று கூறினால், அவருக்குப் பிறகு, அவன் அந்த பரஸ்பர நிதி நிறுவனத்தில் படிவங்கள், பூர்த்தி செய்து, பணம் பெறுவது சுலபமாக இருக்கும்.

இப்போது தெரிந்திருக்கும், முதலீடு செய்து லாபம் பெறுவது ஒரு நிலை, அந்த முதலீட்டில் அனைத்து Documentation சரிவர செய்து அதைப் பராமரித்து, உரிய நபர்களுக்கு சேருமாறு செய்வது, இன்னொரு நிலை. இந்த இரண்டாவது பகுதியை பெரும்பாலோர் செய்வதில்லை. அவர்களுக்காகவே, இந்தக் கட்டுரை! இதைப் படித்தவர்கள், உங்கள் முதலீட்டு நிறுவனங்களில் பான் நம்பர், KYC, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, சரியான விலாசம், Nomination ஆகியவற்றை சரி பார்த்து, விட்டுப் போனவற்றை உடனே பதிவு செய்து, அதற்குரிய பலனைப் பெறுங்கள்.

யூடிஐ மாதிரி பரஸ்பர நிதி கணக்கு அச்சிடப்பட்ட படம் கீழே உள்ளது. இது சரிவரத் தகவல்கள் இல்லாத கணக்கு. இது போல் உங்கள் பரஸ்பர நிதி கணக்கு அச்சிடப்பட்டு இருந்தால், Please Provide என்று இருக்கும் இடத்தில் உள்ள தகவல்களை நீங்கள் பரஸ்பர நிதி நிறுவனத்திற்குத் தருவது நல்லது. KYC Status Yes அல்லது ok என்று இருக்க வேண்டும்.


Mobile No
Off Phone No
Email ID please provide
Joint holder *
Nominee Please Provide

| Holder | PAN | KYC Status |
|---|---|---|
| Primary Holder | Please Provide | No |
| 2nd Holder | Please Provide | No |
| 3rd Holder | | |
| Guardian | | |

MICR No IFS Code : Please Provide
Financial Advisor
Sub ARN Code : Sub Code : EUIN :
Please update your records with: Email ID
You can send your request for Account Statement 24x7 with either your Folio no., or PAN or Email ID (provided PAN and Email ID is registered in the Folio) by logging on to UTI Mutual Fund's website www.utimf.com The service is available with a drop down option of "Request for SoA" under the heading "Customer Service".

மின்னஞ்சல் முகவரி, விலாசம் போன்றவை மாறக்கூடியது, மாறினால், அதை உடனுக்குடன் மாற்றிப் பதியவும். இப்பொழுது ஒரு "Tip" சொல்கிறேன். நீங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட பரஸ்பர நிதி நிறுவனங்களில், முதலீடு செய்து இருந்தால், ஒவ்வொரு நிதி நிறுவனத்திலும், கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, சரியான விலாசம் ஆகியவற்றை மாற்ற வேண்டாம். அதற்குப் பதிலாக, Change kyc form மூலமாக, ஒரு முறை மாற்றினால், எல்லா பரஸ்பரநிதி நிறுவனங்களும், அந்த விவரத்தைப் பெற்றுக் கொள்ளும். எனவே இந்த Non-Financial Data எல்லாவற்றையும், சரியாகப் பதிந்து பயன் பெறலாம். இக்கட்டுரை பற்றி மேலும் விவரம் அறிய ஆர்வம் உள்ளவர்கள் ஈமெயில் மூலம் அணுகலாம்.

- meenakshisundaram.kannan@yahoo.in

-தொடரும்

# சமைப்போம் சுவைப்போம்

## வாழைப்பூ வடை

தேவையானவை :

வாழைப்பூ 1, பொட்டுக்கடலை 100 கிராம் (மிக்சியில் பவுடர் போல் அரைத்துக் கொள்ளவும்), உப்பு தேவையான அளவு, எண்ணெய் தேவையான அளவு, சோம்பு தூள் 1 டீஸ்பூன், இஞ்சி, பூண்டு விழுது 2 டீஸ்பூன்.

செய்முறை :

முதலில் வாழைப் பூவை ஒரு பாத்திரத்தில் வேக வைத்து வடித்துக் கொள்ளவும். வாழைப்பூ ஆறிய பின்பு மிக்சியில் அரைத்துக் கொள்ளவும். அரைத்து வைத்த வாழைப் பூவுடன், பொட்டுக் கடலை பவுடர், சோம்பு தூள், இஞ்சி, பூண்டு விழுது மற்றும் உப்பு சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும். தண்ணீர் சேர்த்துக் கொள்ள வேண்டாம்.

பிசைந்து வைத்த வாழைப்பூ மாவை சிறு உருண்டைகளாக உருட்டியோ அல்லது வடையாக தட்டி கொள்ளவும். பின்பு ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி, தட்டி வைத்த வாழைப்பூ வடையைப் பொரித்து எடுத்தால் வாழைப்பூ வடை ரெடி.

## நூடுல்ஸ் போண்டா

தேவையானவை :

வெங்காயம் 1 (சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்), பச்சை மிளகாய் 2, காரட் 1, பீன்ஸ் 5, குட மிளகாய் நறுக்கியது கொஞ்சம், பச்சைப் பட்டாணி கொஞ்சம், உருளைக் கிழங்கு கொஞ்சம், எண்ணெய் தேவையான அளவு, நூடுல்ஸ் சின்ன பாக்கெட், கடலை மாவு அல்லது போண்டா மிக்ஸ் தேவையான அளவு, உப்பு தேவையான அளவு.

செய்முறை :

முதலில் காரட், பீன்ஸ், உருளைக் கிழங்கு, பச்சைப் பட்டாணி மற்றும் தேவையான அளவு உப்பையும் சேர்த்து குக்கரில் இரண்டு அல்லது மூன்று விசில் விட்டு நன்கு வேக வைத்துக் கொள்ளவும். பின்பு ஒரு கடாயில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி, வெங்காயம், பச்சை மிளகாய், குட மிளகாய் மற்றும் வேக வைத்த அனைத்து காய்கறிகளையும் சேர்த்து நன்கு வதக்கிக் கொள்ளவும். மற்றொரு பாத்திரத்தில் நூடுல்ஸ், மசாலாவுடன் தேவையான அளவிற்கு தண்ணீர் சேர்த்து நன்கு வேகவைத் துக் கொள்ளவும்.

வேகவைத்த நூடுல்ஸ் மற்றும் வதக் கிய காய்கறிகளை சேர்த்து சிறிய உருண் டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். கையில் சிறிது தண்ணீர் தடவி, உருட்டினால் கையில் ஒட்டாமல் இருக்கும்.

ஒரு வாணலியில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி (பொரிக்கும் அளவுக்கு எண்ணெயை எடுத்துக் கொள்ளவும்) மிதமான அளவில் எண்ணெயை சூடுபடுத்திக் கொள்ளவும்.

கடலை மாவை / பஜ்ஜி போண்டா மிக்சில் தேவையான அளவிற்கு தண்ணீர் மற்றும் கொஞ்சம் உப்பையும் (குறிப்பு: பஜ்ஜி போண்டா மிக்ஸ் ஏற்கனவே உப்பு சேர்ந்து இருக்கும்) சேர்த்து (பஜ்ஜி போடும் அளவிற்கு) ரெடி செய்து பின்பு உருட்டிய உருண்டைகளை அந்த மாவில் சேர்த்து, வாணலியில் போட்டு, பொரித்து எடுத்தால் சுவையான நூடுல்ஸ் போண்டா ரெடி. குழந்தைகளுக்கு இது மிகவும் பிடிக்கும்.

-அபி

# நகரத்தார் சிகரத்தார்

4

காரைக்குடி நாராயணன்

ராஜ்மோகன் வீட்டிற்குள் வந்தார்.

சிகப்பி ஆச்சி வீட்டிற்குள் உள்ள நான்கு கண்ணாடி அலமாரிகளிலும் புத்தகங்களாக அடுக்கப்பட்டிருந்தன. அவற்றைக் குட்டி குப்பாயி துணியால் துடைத்துக் கொண்டிருந்தாள்.

மொட்டை மாடியில் மெத்தை தலையணையைக் காயப் போட்டுக் கொண்டிருந்த ஆச்சி, கீழே கோவில் குருக்கள் ஈசுவரன் வருவதைப் பார்த்து, மாடிப்படிகளிலிருந்து இறங்கி வந்தாள்.

"வாங்க சாமி, கோயில் கைங்கரியமெல்லாம் நல்லா நடக்குதுல்ல.."

"நன்னா நடக்கறது. நகரத்தார்கள் சம்பந்தப்பட்டிருக்கச்சே, எந்தக் கோயில் கைங்கர்யம்தான் நன்னா நடக்காம போகும்?"

"அது நெசந்தான். என்ன விஷயம்?"

"உ.பெரி. வெள்ளையன் செட்டியார் வீட்டுல இப்போ கல்யாணம் நடந்துதோ இல்லியோ, அவா ஆத்து மாப்பிள்ளை அமெரிக்காவுக்கு வேலைக்குப் போறாராம். அதுக்கு அபிஷேகம் வச்சிருக்கா. பிள்ளையாருக்கு தங்க அங்கி சாத்தணுமாம்..."

"டேய், சிங்காரம் இங்கே வா..."

"பலாக்காய் பறிச்சுக்கிட்டிருக்கேன் ஆச்சி..." தோட்டத்திலிருந்து சிங்காரம் பதில் சொன்னான்.

"பலாக்காய் எங்கேயும் ஓடிப் போயிடாது. அதை அப்புறம் பறிக்கலாம். செத்த இங்க வந்திட்டுப் போ..."

சிங்காரம் பலாமரத்திலிருந்து இறங்கி ஓடி வந்து, வேட்டியைச் சரி செய்து கொண்டான். சாமி வீட்டு அறையை சிகப்பி ஆச்சி திறந்தாள். அங்கு துணி போட்டு, மூடப்பட்டிருந்த தங்க அங்கியை எடுத்துக் குருக்களிடம் கொடுக்கச் சொன்னாள்.

"சாமி, நம்ம கோயிலுக்கு எப்போ கும்பாபிஷேகம் வருது?"

"வர்ற பங்குனியில வருது ஆச்சி. கோயிலுக்கு வர்ணம் அடிக்கணும். குளத்தைச் சுத்தம் பண்ணி, இரும்பு வேலி போடணும். குளத்தை அசுத்தம் பண்றா. துணிமணி துவைக்குறா..."

"காவக்காரன் கோட்டையன் எதுக்கு இருக்குறான்?"

"அவன் பாதிநேரம் கோயில்லே இருக்குறதில்லே. கேட்டா எதையாவது சாக்குபோக்கு சொல்றான். 2,000 ரூபாய் கைமாத்துக் கேட்டான். நீங்க கொடுக்கலையோ இல்லியோ, எடக்கு பண்றான்."

"அவனுக்கு நம்ம செலவுல கல்யாணம் பண்ணி வச்சிருக்கு. கோயில்ல வாடகை இல்லாம வீடு கொடுத்திருக்கு. அவன் பொண்டாட்டி பிரசவச் செலவுக்குச் செலவழிச்சிருக்கு. இதைவிட என்ன வாம்? குனியக் குனியக் கொட்டக்கூடாது. சாமி கண்டிப்பா இருங்க. கொட்டுனாத்தான் தேளு, இல்லேன்னா புள்ளைப் பூச்சி. கைமாத்து கால்மாத்தெல்லாம் வேணாம். தர்மம் வியாபாரமாகக்கூடாது. இந்தப் புதுப் பழக்கம் செய்யாதிய!"

"நான் புதுப்பழக்கமெல்லாம் செய்யலே. உங்களுக்கு விஷயம் தெரியணுமோ இல்லியோ... அதான் சொன்னேன். பூனை கண்ணை மூடிக்கிட்டா பூலோகம் இருண்டு போகுமா?"

"அவனை விடுங்க. கும்பாபிஷேகத்துக்கு என்னென்ன செலவு வரும்னு எழுதிக் கொடுங்க. கணக்கப்புள்ளை வந்ததும் பாக்கச் சொல்றேன்.



கும்பாபிஷேகத்துக்கு அவசியம் பிள்ளையார்பட்டி பிச்சக் குருக்களை நான் சொன்னதாச் சொல்லி வரச் சொல்லுங்க."

கோயில் செலவில் தாராளமாக இருக்கும் சிகப்பி ஆச்சி, கொடுக்கல் வாங்கலில் மிகவும் கறாராக இருப்பதை ராஜ்மோகன் கவனித்தார்.

குருக்கள் போனதும், ஆச்சி அடுப்படிக்குள் போனாள். சிங்காரம் ஆறு பலாக்காய்களைப் பறித்துக் கொண்டு வந்து, அதன் மேல் வடிந்த பாலைச் சுத்தம் செய்தான்.

"எத்தனை காயிடா?"

"ஆறு காயி..."

"தெய்வானை ஆச்சி வீட்ல கேட்டாக. ஒன்னைக் கொடுத்திட்டு, முப்பது ரூபா வாங்கிட்டு வா. இது சந்தையிலே அம்பது ரூபாய்ன்னு சொல்லு. ஒரு காயைக் கோயில் காவக்காரன் கோட்டையன்ட்ட கொடு. அவன்தான் மரத்துக்குத் தெனமும் தண்ணி ஊத்துனான். அவன்ட்ட காசு வாங்க வேணாம். மிச்சம் நாலு இருக்குல்ல, அதையும் நேத்துப் பறிச்சு வச்சிருக்குற வாழைத்தாரு, தேங்காய் எல்லாம் காய்கறிக்காரன் கண்ணப்பன்ட்ட கொடுத்து, வித்துக் காசைக் கொண்டாரச் சொல்லு."

"ஆச்சி, சுண்டக்காய் பறிச்சு வச்சிருக்கேன். அதையும் கொடுத்திரட்டுமா?"

"விளங்காத பயலே, சுண்டக்காய் பச்சடின்னா செட்டியாருக்குரொம்பப்புடிக்கும்னுதானே,பிஞ்சா பறிக்கச் சொன்னேன். அதைக் கொண்டு போய் கொடுக்குறேங்குறியே. இங்கே வச்சிட்டு, அருவா மனையைத் தந்திட்டுப் போ. போனோம் வந்தோம்னு வெரசா வா. பறாக்குப் பாத்திட்டு நிக்காதே. அடுப்படி பூராம் நூலாம்படையா இருக்கு. கோக்காலியை எடுத்துப் போட்டுக்கிட்டு, நல்லா அடிச்சு விடு. போ."

சிங்காரம் புறப்பட்டுப் போனான்.

ராஜ்மோகன் உள்ளே வந்தார். அங்கே அலமாரியிலிருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களைப் பார்த்துப் பிரமித்துப் போனார்.

தொலைபேசி ஒலித்தது. அடுப்படியிலிருந்து சிகப்பி ஆச்சி ஓடிவந்து எடுத்தாள். அவள் கணவர் தண்ணீர்மலையான் செட்டியார் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால், ஒழுகில் சாய்ந்தபடி, உலகச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ரொம்ப நேரமா போன் அடிக்குது. எடுத்துப் பேசுனா என்ன? அடுப்படியிலேருந்து ஓடியாந்து

நாந்தான் எடுக்கணுமா? அப்படி ஒலக விஷயம் தெரிஞ்சு என்ன பண்ணப் போறிய? ஒபாமாவைப் பாக்கப் போறியளா?"

சிகப்பி ஆச்சிக்கு செய்யும் வேலை தடைப் பட்டால் கோபம் வரும். அவள் தொணதொணப்பு, தண்ணீர்மலையான் செட்டியாருக்கு, 'அன்னக் காவடிக்கு அரோகரா' மாதிரி. சிகப்பி ஆச்சி தொலைபேசியை எடுத்துப் பேசினாள். அவளுடன், அவள் பேத்தி நாச்சாள் பேசினாள்.

"அப்பத்தா, நாச்சா பேசுறேன்..."

"சொல்லு நாச்சா, புள்ளைகள்லாம் நல்லா ருக்குகல்ல. உன் செட்டியாரு கத்தார் போனாகளே வந்துட்டாகளா? சும்மா இருக்காகள்ல. பெரியவன் பெத்த பெருமா நல்லாப் படிக்குறானா?"

"நல்லாப் படிக்குறான். ஆனா படிச்சதை மறந் திடுறான்."

"எதவுசா சொல்லி நல்லா படிக்கச் சொல்லு. மார்க்கு நல்லா வாங்குறான்ல..?"

"நல்லா வாங்குறான். ஏ கிரேடு"

"அப்புறமென்ன, சின்னவன் செல்லப்பன் என்ன பண்றான்?"

"அவனுக்குத்தான் அடிக்கடி சளி புடிக்குது. காய்ச்சல் வருது..."

"இங்கே இருந்தா கைவைத்தியமாவது பாக்க லாம். அவனும் நல்லா படிக்குறான்ல?"

"கணக்குத்தான் வரவே மாட்டேங்குது. நேத்து நல்லா அடிச்சேன்..."

"அடிக்காதே ஆத்தா. சின்னப்புள்ளைதானே..."

"ஆணை அடிச்சு வளக்கனும், பொண்ணைப் பொசுக்கி வளக்கனும்ங்குறாளே..."

"அது அப்படி இல்லை. ஆணை அடக்கி வளக் கனும். பொண்ணைப் பொத்தி வளக்கனும். ஆத்தா நாச்சா, ஒங்க அய்யா தொலைக்குக் கொண்டு விக்கப் போனப்போ, கீழ்மாகாணி, முந்திரி, வட்டிச்சிட்டை, கடுதாசி எழுதுறது இதெல்லாம் தெரிஞ்சாப் போதும். இப்போ கம்ப்யூட்டர் காலம். அதுக்குத் தகுந்தாப்போலதான் படிக்கணும். அவனுக்குப் புரி யுற மாதிரிச் சொல்லிக்கொடு. அதை விட்டுட்டு, செட்டி போன எடமெல்லாம் வட்டி காப்பணம்னு காலம் தள்ள முடியுமா?"

நாச்சாள் வீட்டில் ஏதோ சாமான்களைக் கீழே போட்டு உடைக்கும் சத்தம் தொலைபேசியில் ஆச்சிக்குக் கேட்டது.

"நாச்சா, என்னது சத்தமா இருக்கு?"

"அப்பத்தா ரெண்டும் ஒன்னை ஒன்னு அடிச் சுக்கிட்டு உசுரை எடுக்குதுங்க. தாங்க முடியலே. தலை வலிக்குது..."

"சின்னப் புள்ளைகதானே! அதுகளுக்கு என்ன தெரியும்? உண்பான், தின்பான் உடையப்ப செட்டி, ஊஞ்சலேறி உடைப்பான் ஆவுடையப்ப செட்டி!"

சிகப்பி ஆச்சிக்குத் தினமும் பல்லில் தண்ணீர் படுகிறதோ இல்லையோ பழமொழி பட்டே தீர வேண்டும்.

"நீ ரெண்டு புள்ளை பெத்ததுக்கே இப்படிப் பேசறே. அதுவும் உனக்கு வலி தெரியாம கத்தி வெச்சு சிசரியன்ல பொறந்த புள்ளைக. நான் எட்டுப் புள்ளைகளைப் பெத்தேன். எல்லாம் வலி வந்து பெத்ததுதான். எங்க சின்ன ஆயா சீமைச் சமத்தி. என்னைக் கட்டாந்தரையில பத்து நாள் போட்டுட்டுப் போய்ட்டா. குமரி ஒரு புள்ளைக்கு கோடி ஒரு வெள்ளைக்கு. இப்ப மாதிரி நர்சிங்ஹோம், ஏ.சி., மருந்து, மாத்திரை, ஊசி எல்லாம் எங்களுக்கு ஏது? சரி, சீக்கிரம் விஷயத் தைச் சொல்லு. ஒங்க அய்யாவுக்கு அப்பளம், கிள்ளுவத்தல், தேங்குழல் வத்தல் எண்ணெயில போட்டு, நாள் தவறாமப் பொரிக்கணும். எத்தனை வெஞ்சனம் இருந்தாலும், வத்தல் இல்லாமப் சாப்பிட மாட்டாக. எண்ணெய் வெலை கொஞ் சமாவா விக்குது? எண்ணெய் வெலை இருக்கட்டும். கொலஸ்ட்ரால் வந்திடும்னா கேக்குறாகளா? அது வும் செக்கெண்ணெய் வேணும். நீ விஷயத்தைச் சொல்லு..."

நாச்சாள் அழ ஆரம்பித்தாள்.

–உயர்வர்

## நல்ல உள்ளம்

தங்கள் பத்திரிகையை எங்கள் ஊர் வாசக சாலையில் படித்தேன். அடைக்காத்தாள் டிரஸ்ட் பற்றி விளக்கமாக எழுதியிருந்தீர்கள். அவர் களிடம் விவரம் கேட்டு, திரு.என்.கே.எம். வேலாயுதம் செட்டியார் அவர்களுக்கு 27.8. 2015–இல் சிவகங்கை ஐசிஐசிஐ பேங்க் செக் மூலம் ரூ.5,000 அறக்கட்டளையில் சேர்த்துக் கொள்ளும்படி அனுப்பியுள்ளேன்.

***–டாக்டர் எஸ்பி. கண்ணப்ப செட்டியார், காளையார்மங்கலம்.***

# அறநெறியே சட்டம்! அறம் கூறும் அவையம்!

**இ**வ்வுலகமே
**பி**ன்பற்ற வேண்டிய
**கோ**ட்பாடுகள்...

## இ.பி.கோ.வும், இன்பத் திருக்குறளும்

வழக்கறிஞர் என்.எஸ்.ராஜன்

முப்பாலில் முதல் பால் அறம்!

அறமே ஆரம்பமாக இருக்க வேண்டும்!

அறத்தின் வழியே நின்று, அறம் சார்ந்து பொருள் ஈட்டி, அதனால் வந்த பொருள் கொண்டு, அதன்பின், அறவழியிலேயே இன்பமும் காண வேண்டும்! ஆக, எல்லாமே அறவழிதான்! பொருள் ஈட்டுவதும் அறவழியே! இன்பம் நுகர்வதும் அற வழிக் கோட்பாடுகட்கு உட்பட்டே!

அன்பும் அறனும் உடையதுதான் இல்வாழ்க்கை. அறத்தால் வருவதே இன்பம். அறமே சட்டம்! ஆக, அறத்துக்கே அதிக முக்கியத்துவம்! வாழும் வாழ்க்கையில் அறம்! அரசு நிர்வாகத்தில் அறம்! நீதியை நிலைநாட்டுவதிலும் அறம்! இப்படி எங்கும் அறமே கோலோச்சும்!

அறம் எனும் நெறிமுறை கடைப்பிடிக்கப்படுகிற போது, குற்றங் கள் நடைபெறுவதில்லை!

அந்த 'அறம்' சட்டநெறியாகக் கோலோச்சி னால், அல்லவை தேயும்! நன்மைகள் பெருகும்!

**'அல்லவைதேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்'**

இதைத்தான் 'தர்மம்' (DHARMA) என்று வட மொழி நூல்கள் இயம்புகின்றன! தர்மத்தின் ஆட்சி என்று!

('அறம்' வேறு – 'தர்மம்' வேறு என்று சில அறிஞர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். தர்மத் தையும் உள்ளடக்கியது அறம். தமிழரின் பண் டைய இலக்கியங்களில் 'அறம்' எனும் சொல்லே

எங்கும் பயன்பட்டது. இது பற்றிய விரிவான விவரங்களையும் பின்வரும் இதழ்களில் காண்போம்.)

பொதுமக்களிடையே எழும் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் மன் றங்களை நாம் 'நீதிமன்றங்கள்' – Court of Justice என்று அழைக்கிறோம்.

Court என்பதைத் தமிழில் 'முறையிடும் மன்றம்', 'முறையீட்டு மன்றம்' என்று குறிப்பிடலாம். பழைய தமிழ் இலக்கியங்களில் நீதிமன்றங்களை 'அறங் கூறும் அவையம்' என்றே குறிப்பிட்டுள்ளார்கள். 'அறத்தைக் கூறும் அவையம்' என்றே பண்டையத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுவதால், அவர்கள் 'அறமே' சட்டமாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளது தெளிவாகிறது.

நம் பண்டைய இலக்கியங்களில் 'சட்டம்' என்ற சொல் இருந்ததாகத் தெரியவில்லை. 'அறம்' என்று தான் இருந்துள்ளது.

'அறங்கூறும் அவையம்' என்றுதான் நீதிமன்றங்கள் கூறப்பட்டன.

**அரசு கோல் கோடினும், அறங் கூறு அவையத்து**
**உரை நூல் கோடி ஒரு திறம் பற்றினும்.....**

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

**செற்றமும் உவகையும் செய்யாது காத்து**
**சிறந்த கொள்கை அறங் கூறு அவையம்....**

என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது.

அகநானூற்றுப் பாடல்களில், பல இடங்களில், இந்த 'அறம் கூறும் நல் அவையத்தை'ப் பற்றிப் பேசப்படுகிறது.

இந்த அறங்கூறும் நல்லவையங்களில், வான் புகழ் நீதி வழங்கப்பட்டது. அது அறத்தின்பாற்பட்டதாக அமைந்திருந்தது. அங்கே, அந்த நாட்களில், எழுதப்பட்ட சட்டங்கள் இல்லை! தொகுக்கப்பட்ட சட்ட நியதிகள், விதிமுறைகள் இல்லை. அச்சிடப்பட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இல்லை!

அரசனே நீதி வழங்கினான்!

அவன் நீதி அரசனாகவும் இருந்தான்!

அவன் மக்களால் தெய்வமாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டான்!

அவன் சொன்ன நீதி, முறை கேட்டு வந்தவருக்கு, முறையாக, நிறையாக அமைந்திருந்தது. அது 'அறமாகவே' இருந்தது.

முடிசூடி முறை சொன்ன மன்னவன் வயதில் சிறியவனாக, இளைஞனாக இருந்தாலும் சரி, அனுபவத்தில் சிறந்த வயது முதிர்ந்த நரைமுடி மன்னவனாக இருந்தாலும் சரி, அன்று சொன்ன நீதியில் 'அறம்' தெரிந்தது. அனைவரும் வியக்கும்படியாகவும் இருந்தது!

ஒரு காட்சி பாருங்கள்!

ஒருவன் தன்னுடைய நிலத்தை மற்றொருவனுக்கு விற்றுப் பணத்தையும் பெற்றுக் கொண்டு விட்டான். நிலத்தை வாங்கியவன், அந்த நிலத்தைச் சரிசெய்து, உழுதிடும்போது, அவனுக்குப் புதையல் ஒன்று கிடைத்தது.

புதையல் பானையில் பெரும் அளவு தங்க ஆபரணங்கள், பொன் குவியல்கள்!

நிலத்தைத் தோண்டும்போது கிடைத்த அப் புதையலைக் கண்டவுடன், அந்தத் தோழன் என்ன செய்தான் தெரியுமா?

தான் யாரிடம் அந்த நிலத்தை விலைக்கு வாங்கினானோ, அவனிடம் விரைந்து சென்று,

"ஐயா, நான் தங்களிடம் இருந்து விலைக்கு வாங்கிய நிலத்தை, சரிநிகர் செய்து உழுதிடும்போது, இத்தகு புதையலைக் கண்டேன். இது உமக்குத்தான் சொந்தமானது. நான் நிலத்தைத்தான் விலைக்கு வாங்கினேன். நிலத்தடியில் இருந்த இந்தப் புதையல் உமக்கே சொந்தம். எனவே, பெற்றுக் கொள்ளுங்கள்" என்றான்.

(இந்த நிகழ்ச்சி நடந்தது அந்தக் காலம்! அமுதூறிய செந்தமிழ்ப் பூமி! இதைப் படிக்கும் நண்பர்கள் இதைக் கற்பனைக்குக் கூட ஒவ்வாத இந்த நூற்றாண்டு நிகழ்வாக எண்ணி வியக்க வேண்டாம்! நடக்குமா இப்போது? நகைப்புக்குரிய நடப்பு!)

நிலத்தை விற்றவன் சொன்னான்,

"ஐயா, கண்டிப்பாக இதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது. நான் நிலத்தை முழுமையாக உங்களுக்கு விற்று விட்டேன். விற்றுப் பணத்தையும் பெற்றுக்கொண்டு, நாட்கள் பல ஆயின. நீங்கள் தான் அந்த நிலத்தின் சொந்தக்காரர். எனவே இப் புதையல் உங்களுக்கே உரியது..."

இருவரும் திரும்பத் திரும்பச் சொன்னதைத்தான் சொல்லிக் கொண்டார்களே தவிர, ஒருவர் சொன்னதை மற்றவர் ஏற்கவில்லை. புதையலை ஏற்றுக்கொள்ளச் சிறிதளவும் மனமின்றி, செய்வதறியாது திகைத்த அவர்கள் இறுதியில்,

'புதையல் யாருக்குச் சொந்தம்?' என்ற வினாவுக்குத் தீர்வு காண அறங்கூறும் அவையத்திற்கு வந்தனர்.

**–அடுத்த இதழில் ஆய்வு தொடரும்**

# மருத்துவர்களில் ஒரு சகாப்தம்

## புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.சுப்பிரமணியன்

பேட்டி : எஸ்.ரஜத்

கான்சர் சிகிச்சையில் ஒரு சகாப்தமாக விளங்குபவர் சென்னையைச் சேர்ந்த டாக்டர் எஸ்.சுப்பிரமணியன். இவரது பணி, சேவை, சிறப்புகள், சாதனைகள் நம்மை வியக்க / மெய்சிலிர்க்க வைக்கின்றன. இமாலயப் புகழ் பெற்றுள்ள டாக்டர் எஸ்.சுப்பிரமணியன், நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது நமக்கு பெருமை அளிப்பதாகும். கான்சர் என்ற நோய் வரக் காரணங்கள், சிகிச்சை, கான்சர் வராமல் தடுக்கும் வழிகள், பள்ளி கல்லூரிகளில் இவரது சாதனைகள், இவரது இறை - தமிழ்ப்பற்று, பல சிறப்புகள் வாய்ந்த இவரது கான்சர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை - வி.எஸ்.ஹாஸ்பிடல்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி என்று, பல சுவாரசியமான, பயனுள்ள விஷயங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்-

**கான்சர் தொற்று வியாதியா?**

கான்சர் தொற்று வியாதி அல்ல. கிருமிகளால் ஏற்படுவது தான் தொற்று வியாதி. நம் அனைவருக்கும் வரக்கூடிய சாதாரண ஜலதோஷம் Common Cold மற்றும் மலேரியா, டி.பி. எனப்

டாக்டர் எஸ்.சுப்பிரமணியன், அவரது மனைவி வசந்தா – சொந்த மாமா பெண். 1965–இல் திருமணம். மூத்த மகன் டாக்டர் சுந்தர் – சென்னை ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் ஆர்த்தோ (Ortho) பேராசிரியர். மனைவி உமா. இவர்களுக்கு இரண்டு பெண்கள். இரண்டாவது மகன் முத்து. அமெரிக்காவில் Boston-இல் இன்ஜினீயரிங் துறையில் எம்.எஸ். படித்தவர். 2003 முதல் வி.எஸ். ஹாஸ்பிடலின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கிறார். மனைவி சாரதா. இவர்களுக்கு இரட்டைப் பெண் குழந்தைகள். ஒரே மகள் அமுதா. கணவர் டாக்டர் ராமகிருஷ்ணன். ஆர்த்தோ பிரிவில் சர்ஜன். இவர்களுக்கு மூன்று பெண்கள். முதல் பெண் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். முதலாண்டு படிக்கிறார்.

*படும் காசநோய், ஸிஃபில்லிஸ் (பால் நோய்), எய்ட்ஸ் நோய் போன்றவைதான் தொற்று நோய்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், காசநோயைக் குணப்படுத்தக்கூடிய தகுந்த மருந்துகள் இருக்கவில்லை. எனவேதான், கணிதமேதை ராமானுஜன், மகாகவி பாரதியார், பாகிஸ்தானின் முதல் அதிபர் ஜின்னா போன்ற சரித்திர புருஷர்கள் சிகிச்சை பலனின்றி இறக்க நேரிட்டது. இப்போதுள்ள மருத்துவ முன்னேற்றத்தில் இவர்களைக் கண்டிப்பாக ஆறுமாத சிகிச்சையில் காப்பாற்றியிருக்க முடியும். நம் உடலுக்குள் ஏற்படும் கட்டுப்பாடு அற்ற திசு வளர்ச்சியில் கான்சர் உண்டாகிறது.*

**கான்சர் நோய் வரக் காரணங்கள் என்ன?**

*பத்து சதவீதம் பரம்பரைக் காரணங்களால் ஏற்படுகிறது. மீதி 90 சதவீதம் நமது வாழ்க்கை முறை, (life style) காரணமாக ஏற்படுகிறது. பீடி, சிகரெட்மற்றும்எந்தவகையிலாவதுபுகையிலையை உபயோகிப்பது,மதுபானங்கள்குடிப்பது ஆகியவை அறுபது சதவீதம் கான்சர் வருவதற்குக் காரணங்கள்*

ஆங்காலஜிஸ்ட் (Oncologist) என்று அழைக்கப்படும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களில், இன்று இந்தியா முழுவதிலும் சீனியர் மோஸ்ட் (Senior Most) அதிக அனுபவம் கொண்ட மருத்துவர் டாக்டர் எஸ்.சுப்பிரமணியன்தான் !

என்று சொல்லலாம். தொண்டை, வாய், நுரையீரல், உணவுக்குழாய், இரைப்பை, கணையம், சிறுநீரகம், மூத்திரப்பை (bladder), கல்லீரல், (liver) ஆகிய உறுப்புகளில் புகையிலை, மதுபானம் காரணமாக கான்சர் வருகிறது. புகையிலைஎல்லாவகைகளிலும், மதுபானங்கள், இரண்டையும் அறவே தவிர்ப்பது, நமது தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம்.

உணவுப் பழக்கங்கள் காரணமாகவும் கான்சர் வர வாய்ப்பு உள்ளது. வறுக்கப்பட்ட பொருள்கள் fried items, excess intake of animal fats, protein மிருகங்களின் கொழுப்பு, புரோட்டீன் ஆகியவற்றை அளவுக்கு மீறி சாப்பிடுவது, ஜங்க் ஃபுட் (Junk food) எனப்படும் உணவு வகைகள் உண்பது, உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

சைவ உணவு சாப்பிடுபவர்கள், ஒரு நாளைக்கு இரண்டு டம்ளர் பால் சாப்பிடலாம், காப்பி, டீயில், தயிர், வெண்ணெய் என பலவகைகளிலும் சேர்த்து. காய்கறிகள், பழங்களைத் தவிர்ப்பதும், குறைந்த அளவில் சாப்பிடுவதும் குடலில் (Colon) கான்சர் வருவதற்கு வாய்ப்பு உண்டு.

இவற்றைத் தவிர, ரசாயன பொருள்கள், அஸ்பெஸ்டாஸ், Toxins தயாரிக்குமிடங்கள், நிலக்கரி சுரங்கம் போன்ற இடங் களில் பணி புரிபவர்களுக்கும் கான்சர் பாதிப்பு ஏற் படலாம்.

பெண்களிடம் கருப்பை வாய் uterine cervic, மார் பகப் புற்றுநோய் இரண்டும் அதிகமாகக் காணப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் வசிக்கும் பெண்களுக்கு கருப்பை வாய் கான்சர் 40 சதவீதமும் மார்பகப் புற்று நோய் 20 சதவீதமும் காணப் படுகின்றன. நகரங்களில் வாழும் பெண்களிடம் மார்பகப் புற்று நோய் 40 சதவீதமும், கருப்பை வாய் கான்சர் 20 சதவீதமாகவும் காணப்படுகின்றன.

கருப்பை வாய் கான்சரைத் தவிர்க்க தடுப்பூசி (Vaccine) இப்போது இருக்கிறது. ஒரு பெண்ணின் 9-வது வயதிலிருந்து திருமணம் ஆகும் வரை, இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள் ளலாம்.

இன்று போட்டுக் கொண்டால், அடுத்தது முப்பது நாட்கள் கழித்து, மூன்றாவது 180 நாட்களில் என்று மூன்று முறை தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். இன்றைய நிலவரப்படி, இந்த ஊசிகளுக்கு ஆறாயிரம் ரூபாய் செலவு ஆகும்.

இந்த ஊசிகளைப் போட்டுக் கொண்டால் வாழ்க்கை முழுவதும் அந்தப் பெண்ணிற்குக் கருப்பை வாய் கான்சர் வராது.

–தொடரும்

நூற்பது ஆண்டுகளுக்கு மேலான மருத்துவப் பணியில் இவர் ஐம்பது லட்சத்திற்கும் அதிகமாக கன்சல்டேஷன்கள் (நோயாளியைப் பார்த்து, பரிசோதித்து, சிகிச்சை அளிப்பது) செய்திருக்கிறார். இது மாபெரும் சாதனை ஆகும்.

## பரசுராமன்

அரும்பெரும் தகவல்களை அப்படியே பாடல்களாக வெளியிடுவதில் நமது முன்னோர்கள் தலை சிறந்தவர்கள். அப்பாடல்களையும் வெறும் பாடல்களாக வெளியிடாமல், அவற்றில் ஒரு கதையையும் இணைத்து, நம்மனதில் பதிய வைத்து விடுவார்கள்.

அவ்வாறு நூறுபாடல்களைச் சொல்லி, அவற்றில் அற்புதமான கதைகளையும் சொல்லி, நம் மனதில் ஆழமான தகவல்களைப் பதிய வைக்கிறார் பாடுவார் முத்தப்பர்.

முத்தான பாடல்;

முருகனைப் பற்றிய பாடல் இதோ!

தஞ்சம் எனச் சரண் புகுந்த அமரர்களைப்
புரப்பதற்கா(க)ச் சரவணத்தில்
மஞ்சனெனத் தோன்றிய வேள் வடிவேலால்
கிரவுஞ்சம் மாய்ந்தது அன்றோ?
செஞ்சரணத்தால் யமனை வென்ற செயங்
கொண்டாரே! தேவரேனும்
வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும் இது பொய்யல
உலகில் நிச வசனம் தானே!

சூரபத்மனின் கொடுமை தாங்காமல் துயரக்கடலில் சிக்கித் தத்தளித்த தேவர்கள் இறைவனிடம் முறையிட, முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் குழந்தையாக அவதரித்து, கிரௌஞ்சாசுரனை சங்காரம் செய்தார் எனும் தகவலைச் சொல்லித் துவங்குகின்றது இப்பாடல்.

கிரௌஞ்சவதத்தைச் சொன்ன இப்பாடலில், சூரசங்காரத்தைப் பற்றிப் பாடுவார் முத்தப்பர் சொல்லவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஏன் இப்படி? கிரௌஞ்சவதத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன்?

இதை உணரவேண்டுமானால், கிரௌஞ்சனைப் பற்றிய தகவல்களை உணரவேண்டும். உணர்ந்தால்... பாடுவாரின் உள்ளம் புரியும்.

கிரௌஞ்சன் என்பவன் ஓர் அரக்கன். இரக்கம் என்பது கடுகளவுகூட இல்லாதவன். அவன் ஒரு மாபெரும் மலை வடிவம் கொண்டு இருப்பான். அந்த மலையில் ஒரு பாதையும் உண்டு. அப்பாதையைப் பார்த்து, யாராவது அதில் நுழைந்து கடக்க முயன்றால், வழியில் வேறொரு பாதை வரும். அதில் போனால் மற்றொரு பாதை பிரியும். அதைப் பின்பற்றினால்... வேறொரு பாதை குறுக்கிடும். இப்படியே போய்ப் போய், அதில் நுழைந்தவர்கள் கடைசியில் மயக்கத்தில் ஆழ்ந்து, அழிந்து போவார்கள்.

பெரும் பெரும் முனிவர்கள்கூட, கிரௌஞ்சனின் இந்த மாயவலையில் சிக்கி, முடிந்து போயிருக்கிறார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், இதற்கு முடிவுதான் என்ன?

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு இருக்கும்போது, கிரௌஞ்சனின் வஞ்சனைக்கு ஒருமுடிவு இருக்காதா? அது அகத்தியரின் வடிவில் வந்தது. ஒரு சமயம்...

அகத்தியர் அவ்வழியாக வந்தபோது, அவரையும் வழிமறித்தான் கிரௌஞ்சன். சற்று நேரத்திலேயே கிரௌஞ்சனின் வஞ்சனையை உணர்ந்து கொண்டார் அகத்தியர்.

# தைப்பூசத் திருவிழாவின் மகிமை!

கடலினையே அள்ளிக் குடித்து வறளச் செய்த அகத்தியருக்குக் கிரௌஞ்சனை எதிர்கொள்ளத் தெரியாதா என்ன? பார்த்தார் அவர்; தன் கையில் இருந்த தண்டத்தால் கிரௌஞ்ச மலையில் ஆங்காங்கே குத்தினார்; ஓட்டைகள் (துவாரங்கள்) உண்டாயின மலையில்.

"கிரௌஞ்சாசுரனே! வஞ்சனையால் மாயங்கள் பல செய்து, நல்லவர்களுக்கு எல்லாம் துயரங்கள் உண்டாக்கும் உன்னை, முருகப் பெருமான் வேலாயுதத்தால் பிளந்து வதம் செய்வார்" எனச் சாபம் கொடுத்தார் அகத்தியர்.

அதன்படியே நடந்தது. தாரகாசுரன் என்பவன் வீரபாகு முதலானவர்களை வஞ்சனையாக ஏமாற்றிக் கொல்ல முயன்ற போது, கிரௌஞ்சன் தாரகனுக்கு உதவி

செய்தான். வீரபாகு முதலானவர்கள், கிரௌஞ்சனின் வஞ்சனையில் மயங்கி விழுந்தார்கள். அப்போது...

முருகப்பெருமானின் வேலாயுதம், கிரௌஞ்சனின் வஞ்சனைகளை மாய்த்ததோடு, கிரௌஞ்சனையும் மாய்த்தது. வீரபாகு முதலானவர்கள் மயக்கம் நீங்கி விடுதலை பெற்றார்கள்.

கந்தபுராணம் சொல்லும் தகவல் இது. இது எதைச் சொல்ல வருகிறது? பாடுவார் முத்தப்பர் இதைச் சொல்லக் காரணம் என்ன? இக்கால முறைப்படி பார்த்தால்...

கைபேசி எனும் செல்ஃபோன்! எங்கிருந்தாலும் அவசரத்திற்குத் தொடர்பு கொள்வதற்காக உருவான கைபேசி இப்போது, புகைப்படம் எடுக்க ஒலி, ஒளி (விடியோ) பதிவு செய்ய ஒலிப்பதிவு செய்ய உலகம் முழுவதும் நடப்பதைப் பார்க்க எனப் பலவகைகளிலும் விரிந்து, அனைவரையும் பைத்தியமாக்கிக் கொண்டிருக்கிறது. மீள முடியவில்லை.

இதேபோல, ஒன்றிலிருந்து மற்றொன்று அதிலிருந்து மற்றொன்று என மாறி மாறிப் போய்க் கொண்டிருக்கிறது. விளைவு?

துயரங்களும் பலவிதங்களிலும் நம்மைப் புரட்டிப் போட்டு அடிக்கின்றன. அகத்தியர் வந்து வழி காட்டியதைப் போல, யாராவது ஞானவான், அனுபவசாலி ஒருவர்

வந்து வழி காண்பிக்கிறார். அதைப் பின் பற்றி நடந்தால், இறைவன் திருவருளால் துயரங்கள் விலகிப் போகின்றன.

தேவர்களின் துயர் தீர்க்க அவதரித்த முருகனைக் குறித்துப் பாடுவார் பாடியதை முன்னிட்டு, முருகனின் தைப்பூச விழா வைப் பற்றிப் பார்க்கலாம்.

தைப்பூசத் திருவிழா பழனியில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படும். அது வும் அடிவாரத்தில் எழுந்தருளி இருக்கும் பெரிய ஆவுடையார் பெரியநாயகி செல்வ முத்துக்குமாரசுவாமி சன்னிதிகள் கொண்டு, சோமாஸ்கந்தக் கோவிலில்தான் 'தைப்பூசத் திருவிழா' மிகவும் கோலா கலமாகக் கொண்டாடப்படும். தைப்பூசத் திற்கு அப்படி என்ன விசேஷம்? அதுவும் பெரியநாயகி கோவிலில் கொண்டாடப் படக் காரணம் என்ன?

முருகப்பெருமான் ஞானப்பழத்திற்காக உலகை வலம் வந்து இம் (பழனி) மலையில் நின்றபோது, அம்பிகை வந்து நின்ற இடம் இதுவே! இங்கு நின்றுதான் அம்பிகை முருகப்பெருமானை அழைத்தார். அம் பிகை வந்து நின்ற இடத்தில்தான் பெரிய நாயகி ஆலயம் அமைந்துள்ளது.

தைப்பூசத் திருநாளன்றே அம்பிகை முருகப் பெருமானுக்கு வேலாயுதம் அளித்து, வெற்றிவாகை சூட ஆசீர்வ தித்து அனுப்பினார். அடுத்தது...

அமாவாசையன்று நிலவு இருப்ப தில்லை; பௌர்ணமியன்று முழுநிலவாகப் பிரகாசிக்கும் என்கிறோமல்லவா? அது போல, தைப்பூசத்தன்று சூரியனில் அபரி மிதமான சில சக்திகள் வெளிப்படும். அதை நாம் அடைவதற்காகவே 'தைப்பூசத்தன்று சூரிய தரிசனம் செய்ய வேண்டும்' என்ற வழிமுறையையும் கூறினார்கள் நமது முன் னோர்கள்.

சூரியன் தன் பாதையை மாற்றி சஞ் சாரத்தைத் தொடங்கும் உத்தராயண புண்ணிய காலம், தை மாதத்தில்தான் துவங்குகிறது. அப்போது தைப்பூசத்தன்று, சூரியனின் ஏழாம் பார்வை, சந்திரனின் வீடான கடகத்திலும்; சந்திரனின் ஏழாம் பார்வை சூரியன் இருக்கும் மகரத்திலும் விழுகிறது. அத்திருநாளன்று சூரியனால் ஆத்மபலமும், சந்திரனால் மனோபலமும் பெருகுகின்றன. அதன் காரணமாகவே தைப் பூச வழிபாடு விசேஷமாக நடைபெறு கிறது.

நடராஜப்பெருமான் தில்லையில் ஆனந் தத்தாண்டவம் ஆடி, பதஞ்சலி வியாக்கிர பாதர் முதலான அனைவரையும் மகிழ்வித் ததும் தைப்பூசத்து அன்றுதான்.

அன்பையும் கருணையையும் போதித்த வள்ளலார், இறைவனுடன் இரண்டறக் கலந்தது தைப்பூசத்து அன்றுதான்.

இப்படிப்பட்ட தைப்பூசத்தன்று பழனி யில் நிகழ்ந்த ஓர் அதிசயத்தைப் பார்க்க லாம்.

திருலட்சுமி; ஆகாமதேனு; இனன் சூரியன்; குபூமி; டிஅக்கினிபகவான். இவர் கள் அனைவரையும் பூசித்ததால், திருவா வினன்குடி எனும் திருநாமம் பூண்ட திருத் தலத்தின் அருகே....

கந்தசாமி என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு கால் ஊனம். ஒரே ஒரு பசுமாட்டை வைத்துக்கொண்டு, அதில் வரும் வருவாயைக் கொண்டு வாழ்நாளை நடத்தி வந்தார் அவர். செல்வத்தில் சிந்தை யைச் செலுத்தாத அவர், சரவணபவனை மறந்ததே இல்லை; ஆழ்ந்த பக்தி.

ஒருநாள்...

கந்தசாமி பால் கறக்க முயலும்போது, மாட்டின் மடியிலிருந்து, ரத்தமாக வந் தது. மனம் உடைந்துபோன கந்தசாமி, "பழனியாண்டவா! பாலுக்குப் பதில் ரத்த மாகக் கறக்கிறதே! அப்பா! காப்பாற்று! பால்காவடி எடுக்கிறேன்" என மனமுருகி வேண்டினார்.

கந்தக்கடவுள் அருளால் துயர் நீங்கி யது. தைப்பூச நன்னாள்! கந்தசாமி தன் வேண்டுதலை நிறைவேற்ற, இரு சிறு சொம்புகளில் பால் நிரப்பி, காவடி கட்டிக் கொண்டு விந்தி விந்தி நடந்தார். அதற் குள்ளாக...

அப்பகுதி தாசில்தார், கலெக்டரிடம்

நல்ல பெயர் வாங்குவதற்காக, ஊரிலுள்ள அனைவரையும் மிரட்டிப் பழம், பால், மலர்கள், தேங்காய் என அனைத்தையும் பறிமுதல் செய்யாத குறையாக வசூல் செய்து, குவித்து வைத்திருந்தார். அவர் கலெக்டரின் வருகைக்காகக் காத்திருந்த போது...

கந்தசாமி தன் பால் காவடியுடன் அடி வாரத்தை நெருங்கினார். ஆனால்...

அதிகாரப் பரிவாரங்கள், "போய்யா அந்தண்டை! கலெக்டர் வர்ற நேரத்துல வந்தியாக்கும் நீ?" என்று ஏசி கந்தசாமி யை மடக்கி, மலையேற விடாமல் தடுத்து விட்டது.

மனம் வருந்திய கந்தசாமி, காவடியுடன் ஒதுங்கி நின்றார்.

அதேசமயம்...

மலையின்மேல் அபிஷேகம் ஆரம்ப மானது. முதல் குடம் பாலை எடுத்துப் பழனியாண்டவன் திருமேனியில் ஊற்றும் போது, அங்கிருந்த ஒருவருக்கு ஆவேசம் (சாமி) வந்து, "நிறுத்துங்கள்! மேனியெல் லாம் எரிகிறது. இத் தாசில்தார் செய்த தவறி னால், உத்தமமான என் பக்தன் கந்தசாமி, கீழே பரிதவித்துக் கொண்டிருக்கிறான். போய், அவனை அழைத்து வாருங்கள்! அவன் கொணரும் பாலால் அபிஷேகம் செய்யுங்கள்!" என்ற வாக்கு கேட்டது. அப்புறம் என்ன?

கலெக்டரே கீழே வந்து கந்தசாமியை அழைத்துப் போனார். கந்தசாமியின் பாலால் அபிஷேகம் நடந்தது. கந்தசாமி மட்டுமல்லாது, அனைவரும் ஆறுமுகப் பெருமானின் கருணையை உணர்ந்தார் கள்.

அதிசயம் அநேகமுற்ற பழனிமலை என அருணகிரிநாதரால் துதிக்கப்பட்ட, பழனிமலையில் நடந்த அதிசயம் இது.

தைப்பூச நாயகன் நம் மனத்துயரங் களையும், களையும்படியாக வேண்டு வோம்! கந்தக்கடவுள் அருள் புரிவார்!


This Festive Season book a Home in Indiabulls Greens by paying only 10% and the rest on Possession !

World-class infrastructure. Luxury apartments. Premium living.

You will immediately sense a difference when you enter Indiabulls Greens. This stunning gated community is imbued with unwavering quality, evidenced by the many high-end finishes, features and amenities available to each homeowner. Attention to detail and quality are woven throughout the entire residence, from the elements of construction through the final comforts of your home. We have partnered with World renowned firms in the field of construction, structural engineering and architecture to provide residences that supplement your high end lifestyle.

CMDA Approved
Planning Permit No: 9020
Approval No: C/PP/MSB/32 A to AH / 2015

Chennai Corporation Approved
Building Permit No: CEBA/WDCN14/00257/2015

Tamil Nadu Pollution Control Board Approved
TCB No: 15061692177

AMENITIES
- Tennis • Squash
- Basket ball & Badminton court
- Billiards • Cricket pitch
- Aerobics centre • Swimming pool
- Yoga centre • 24 hour café
- A multi-cuisine restaurant
- Spacious banquets and party halls
- Fibre optic connections
- Business centre with video-conferencing facility
- Library and reading lounge within the club



Indiabulls Greens, Chennai project has been awarded the "Best Gated Township-2014" by Construction Industry Awards.

Approved by All Leading Banks and Financial Institutions

1BHK, 2BHK, 3BHK, 4BHK, Commercial Spaces available
Lifestyle apartments starting at 28 Lacs*

SALES OFFICE:
Indiabulls Real Estate Ltd. 68/1A, Perumbakkam-Jalladianpet Join Road Jalladianpet,
Near ELCOT SEZ, Chennai - 600100 | Call: 044-337-20606 | Email: greens@indiabulls.com
Connect with us on: http://on.fb.me/ZfodWU | http://realestate.indiabulls.com/

INDIABULLS greens CHENNAI

*Conditions apply. The information and material contained in this advertisement are for reference only and the same are subject to change without notice. INDIABULLS makes no representation, guidance or warranty of any kind, express, implied or statutory in this regard. This offer is for limited period only and subject to market risks.

சிறுகதை

# ஓடிப் போனவன்

'புதூரணி' ஊரே கோலாகலமாக இருக்கிறது. புதிய பள்ளிக்கட்டிடம். அதை பிரகாசமாக, ஒளி சிந்தும் விளக்குகளால் முழுமையாகச் செய்யப்பட்டுள்ள அலங்காரம். வாழை மரம், தோரணம்... எங்கும் இசை மயம்....

தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மேலதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர்.

இன்னும் சற்று நேரத்தில் முதலமைச்சர் வரப்போகிறார்.

அதற்குச் சில மணித்துளிகள் முன்பாக, படகு போன்ற ஒரு கார், அதை அடுத்து இரண்டு கார்கள் வந்து நிற்கின்றன... அதிலிருந்து மணிராஜும் அவன் அப்பா சுந்தரராமன், அண்ணன், அக்கா, மற்றும் உறவினர்களும், பழைய தலைமையாசிரியர் வெங்கட்ராம அய்யர் எல்லோரும் இறங்குகின்றனர். ஆசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள் அவர்களை வரவேற்று, விழாமண்டபத்தின் முன் இருக்கைகளில் அமரச் செய்கின்றனர்.

அடுத்த கால் மணி நேரத்தில் முதல்வர் வருகிறார். மண்டபத்தில் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி வரவேற்கின்றனர்.

விழா, கடவுள் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பம் ஆகிறது.

மேடையில் முதல்வர், அந்தப் பகுதி எம்.எல்.ஏ., மற்றும் கலெக்டர் அத்துடன் ஒரு இருக்கை அதில் சுந்தரராமன், அமர்ந்திருக்கின்றனர்.

மணிராஜை மேலே வந்து அமரும்படி அழைக்கின்றனர். 'வேண்டாம்... என் அப்பா இருந்தால் போதும்' என்கிறான் மணி.

புதிய கட்டிடத்தை முதல்வர் தலைமையில் சுந்தரராமன் திறந்து வைக்கிறார். கல்வெட்டை எம்.எல்.ஏ திறந்து வைக்கிறார். அதில் தன் அப்பா சுந்தரராமன் பெயர் இருக்கிறதா, அந்தக் கட்டிடத்துக்கு அவன் அம்மா பெயர் பொரித்த கல்வெட்டு இருக்கிறதா என்பதை மிகவும் உன்னிப்பாக பார்த்துக் கொண்டான் மணிராஜு.

விழாவில் பேசிய எல்லோருமே மணிராஜுவைப் புகழ்ந்து பேசுகின்றனர்.

அவனுடைய நினைவுகள் முழுவதும், அந்தப் பள்ளியில் கடைசியாக அவன் அமர்ந்திருந்த இடம், அந்த ஊரில் இருந்து யாரிடமும் சொல்லாமல் நீண்ட தூரம் ஓடிப் போய் ரயில் ஏறிப் பயணம் செய்த நிகழ்வுகள்தான் மனதில் தோன்றுகின்றன. அவர்கள் பாராட்டு எதுவும் பெரிதாக அவன் காதுகளில் விழவில்லை. மனதில் அவன் நினைவுகள் முழுவதும், அவனுடைய இளமைக்கால நாட்களைப் பற்றியே சுற்றிச் சுற்றி வருகின்றது.

என்ன இருந்தாலும் பழைய நிகழ்வுகளை மறக்கவே முடியவில்லை. 23 வருட இடைவெளிக்குப் பிறகு ஊருக்குத் திரும்பவும் வந்த நாள் அன்று நடந்த நிகழ்வுகள், மின்னலாய் மனதில் தோன்றி மறைகின்றன. மீண்டும்

ஏஎல்.எஸ். நாச்சியப்பன்

நினைத்துப் பார்க்கிறான். ஊரில் இருந்த 12 தெருக்களில் இருந்த ஒரு சில வீடுகள் மட்டுமே மாறியிருந்தன. ஒன்று, இரண்டு வீடுகள் புதிய வண்ணத்தில் தோன்றின. ஒரு சில பழைய வீடுகள் இடிக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டு இருந்தன. ஒன்று, இரண்டு வீடுகள் முழுவதுமே புதிதாகக் கட்டப்பட்டு இருந்தன. அவற்றைக் கட்டியிருப்பவர்கள் அந்த ஊரில் இருந்து தொலை தூர நாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டி வந்தவர்கள் கட்டியவை என்பது விசாரணையில் தெரிய வந்தது.

ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டு காரை மெதுவாக ஓட்டி, ஊரையே ஒரு சுற்று வந்து விட்டான். கடைசியாக அவன் பிறந்து, வளர்ந்து, ஓடியாடி விளையாடிய வீடு. காரை, வாசலில் நிறுத்தினான்.

வீட்டு வாசலில் கார் வந்து நின்றதும் ஒரு பெரியவர் தலையை வெளியில் நீட்டி எட்டிப் பார்க்கிறார். யாரோ ஒருவர் ஏதோ ஒரு விலாசத்தை விசாரிப்பதற்காக வந்திருக்கிறார் என்று எண்ணியபடியே திரும்பவும் தலையை உட்புறமாகத் திருப்பிக் கொண்டார்.

மணிராஜுக்குத் தெரியும் அவர்தான் அவனுடைய அப்பா சுந்தரராமன் என்பது.

23 வருஷங்களுக்குப் பிறகு அவன் பிறந்த வீட்டில் காலெடுத்து வைக்கிறான். நீண்ட இடைவெளி. முன் அறிவிப்பு எதுவும் இல்லாமல் திடீரென்று விஜயம் செய்துள்ளதால், உடனடியாக யாருக்குத்தான் எளிதில் அடையாளம் தெரியும். யாருக்கும் அவனை அடையாளம் தெரியவில்லை.

வீட்டுப் படிகளைத் தாண்டியதும் சற்று உரத்த குரலில் "யாரது, உங்களுக்கு யார் வேணும், யாரைப் பார்க்கணும்" என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தார் சுந்தரராமன். "உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கேன்" என்றான் அவர் புள்ளை மணி.

"என்னைப் பார்க்கவா.. நீங்க யாரு?"

"அப்பா, என்னை அடையாளம் தெரியலியா, நான்தாம்பா மணி... மணிராஜு"

"மணியா, என் புள்ளை மணியா.." ஆச்சர்யமும் அதிர்ச்சியும் அடைந்தவராக, திரும்பவும், "என் புள்ளை மணியா?"

"ஆமாம்பா, நான் மணிதான்... 23 வருஷம் ஆச்சுல்லே... அதுதான் உடனடியா அடையாளம் தெரியல்லே உங்களுக்கு" என்று சொல்லியபடியே, தான் கொண்டு வந்த பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, அவர் காலைத் தொட்டு வணங்கினான்.

தான் பார்ப்பது நிஜமா, கனவா என்று ஒன்றும் புரியாமல் தன் கைகளை ஒருமுறை அழுத்தமாகக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார். அவனைக் கட்டி அணைத்துக் கொள்கிறார்.



"மணி... நான் உன்னைத் திரும்பவும் பார்ப்பேன் என்று நினைக்கவே இல்லை... இத்தனை வருஷம் கழித்தாவது எங்கள் ஞாபகம் வந்ததே... ரொம்ப சந்தோஷம்.. எப்படி இருக்கே... நல்லா இருக்கியா.... வா...வா... உட்கார்ந்து பேசலாம்..."

"புவனேஸ்வரி... இங்கே வாம்மா.... எம் புள்ளை வந்திருக்கான்... ஓடிப்போய் நல்ல காப்பியாப் போட்டு எடுத்து வா" என்றார் மகிழ்ச்சியும் பதட்டமும் நிறைந்த குரலில்.

உள்ளே இருந்து சுமார் 40 வயதுப் பெண் ஒருவர் வந்தார். "வாங்க தம்பி.." என்றபடியே உள்ளே சென்று, மீண்டும் காப்பியுடன் வந்தார்.

"தம்பி, எங்கே இருக்கே, என்ன செய்யுற? 23 வருஷத்துக்குப் பிறகு பார்க்கிறேன். நம்ம குலசாமி கூத்தாடும் அய்யனார் சாமி தான், திரும்ப ஒன்னைக் கூட்டி வந்திருக்கிறாரு" என்றபடியே, "முதல்லே காப்பி சாப்பிடு" என்று சர்க்கரையை அதிகமாகப் போட்டுக் கொடுக்கிறார்.

அவன் வீட்டைப் பல வருஷங்கள் கழித்துப் பார்ப்பதால் வீடு மிகவும் சின்னதாகத் தெரிகிறது. காரணம், இது நாள் வரை மிகவும் அதிகமான மக்கள் நெருக்கடியும், வானுயர்ந்த கட்டிடங்களும் நிறைந்த மும்பை நகரில் இருந்து வருவதால்தான்.

சுவரில் மாட்டியிருக்கும் படங்களை ஆவலாகப் பார்க்கிறான். முதலில் ஒரு அழகான பெண்மணியின் படத்தில் மாலை போட்டு, அதன் அருகில் ஒரு விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பார்த்தது அவனை அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது. 'அம்மா... அம்மா... நான் மணி வந்திருக்கேம்மா... என்னை மன்னிச்சிரும்மா... என்னைப் பெற்று வளர்த்த உன்னைக் கடைசிவரை நான் வந்து பார்க்கவே முடியவில்லை' என்று மனதாலேயே வணங்குகிறான்.

அடுத்து, அவன் அண்ணன், அக்கா எல்லோருடனும் அவனும் 5 வயதுப் பையனாக இருக்கும்போது எடுத்த படம். அதில் அவன், அம்மா அப்பா இருவருக்கும் நடுவில் அமர்ந்திருக்கிறான். அவர்கள் பின்புறமாக அவன் அண்ணனும் அக்காவும் நிற்கிறார்கள். அதைப் பார்த்துக் கொண்டே, "அப்பா... அக்கா எங்கே இருக்கு? எப்படி இருக்குப்பா? அண்ணன் எங்கே இருக்காங்க?" என்று கேட்கிறான்.

"அக்கா சாரதா... பக்கத்து டவுன்லேதான் இருக்கு. அவளுக்கு 3 புள்ளைங்க. உன் அத்தானுக்கு அங்கேதான் கவர்மெண்ட் உத்தியோகம்... நல்லா இருக்குப்பா.."

"அண்ணன் காந்திராஜன் சென்னையிலே இருக்கான். அவனுக்குப் புள்ளைங்க இல்லை. மன்னி ரொம்ப நல்லவ... இரண்டுபேரும் அடிக்கடி என்னை வந்து பார்த்துவிட்டுப் போவாங்க... ம்.... எனக்கு இப்போ 70 வயத தாண்டிருச்சு. இனிமே என்ன? பேரப் புள்ளைங்க அப்பப்ப வருவாங்க. அவங்களைப் பார்த்துப் பேசுறதுதான் சந்தோஷம்"

"அதெல்லாம் போகட்டும். நீ எந்த ஊரிலே இருக்கே... என்ன செய்யுறே... 23 வருஷம் கழித்து இப்போவாவது அப்பா ஞாபகம் வந்ததே?"

"எப்படிப்பா நான் மறப்பேன். ஏதோ ஒரு போதாத காலம் உங்களை எல்லாம் விட்டுப் பிரிஞ்சு போயிட்டேன். நான் பம்பாயிலே இருக்கேம்பா.. நல்ல வசதியா இருக்கேன்... சொந்த வீடு, காரு, வேலைக்கு ஆளுங்க எல்லாம் இருக்குப்பா... இன்னும் கல்யாணம் செய்துக்கல. வருஷத்துக்கு சுமார் 3 கோடி ரூபாய் சம்பாதிக்கிறேன். மனசிலே ஒரு வைராக்கியம். ரொம்பவும் உயர்ந்த ஒரு அந்தஸ்து வந்தாத்தான் இந்தப் புதூருக்கு வரணும். இல்லின்னா... அப்படியே வாழ்க்கை முடிஞ்சிறட்டும்ன்னுதாம்பா இருந்தேன். இப்போ நான் விரும்பியபடியே நல்ல நிலைமைக்கு உசந்து வந்துட்டேன். இனிமே உங்களை எல்லாம் விட்டுப் பிரியமாட்டேம்பா...."

"போனதெல்லாம் போகட்டும்... பம்பாயிலே என்ன வேலை?"

"நான் சினிமா காமிராமேனாக இருக்கேம்பா. அங்கே என் பேரு மணி இல்லேப்பா... ராஜுசுந்தர்ன்னு சொன்னாத்தான் தெரியும்ப்பா..."

"ஏம்பா மணின்ற பேரு நல்லாயில்லியா..."

"அதில்லேப்பா, ராஜு என் பேரு. இந்த உலகத்துக்கு உங்களாலேதானே வந்தேன்... அதை மறக்கக்கூடாது என்பதாலே தான் உங்க பேரைச் சேர்த்து வைத்துக்கிட்டேன்"



“சரிப்பா... நீ ரொம்ப களைப்பா இருப்பே... குளிச்சிட்டு ஓய்வு எடு... மதியம் சாப்பிட்ட பிறகு பேசிக்கலாம்.. நான் புவனேஸ்வரிட்டே சாப்பாடு ரெடிபண்ணச் சொல்லுறேன்”

“அவங்க யாருப்பா.... புவனேஸ்வரி?”

“உன் அம்மா போன பிறகு அக்கா சாரதா, அவ கூடவே வந்து இருங்கப்பான்னுதான் கூப்பிட்டா. எனக்கு நம்ம வீட்டை விட்டுப் போக மனசு வரல்லே. அம்மா மாதிரியே, நானும் கடைசிவரை இந்த வீட்டிலே இருந்து தாம்பா கட்டைக்குப் போகணும்...”

“அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா. நீங்க ரொம்ப வருஷம் நல்லா இருக்கணும்”

“அந்தம்மா புவனேஸ்வரி நம்ம வீட்டிலே வேலை செய்யுதுப்பா. ரொம்ப நல்ல குணம். கோபமே வராது. அதுக்கு 4 புள்ளைங்க. ரெண்டு தெரு தாண்டித்தான் அவங்கெல்லாம் குடியிருக்காங்க. அவ புருஷன் டிரைவரா இருக்கான். அவனும் ரொம்ப நல்ல குணம். என்னை அவங்க சொந்த அப்பா மாதிரிப் பாத்துக்குறாங்க. ஒரு குறையும் இல்லேப்பா”

என்னதான் வாய் சொன்னாலும் மனசுக்குள்ளே அம்மா போனதும், அப்பா ரெண்டாம் தாரம் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டாரோ என்று நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று மனசு சுருக்கென்று குத்தியது.

“அப்பா, நான் சாப்பிட்ட பிறகு நம்ம வாத்தியார் வெங்கட்ராம அய்யர் சாரைப் பாத்துட்டு வாரேம்பா”

“அவரும் ஒன்னை அடிக்கடி கேட்டுக்குவாரு. ஏதானாச்சும் தகவல் வந்துதா. மணி எப்படி இருக்கான்? கவலைப்படாதே சுந்தரம். அவன் என்னிக்காவது கண்டிப்பா வருவான்னு சொல்லுவாரு”

குளித்து, உடைகளை மாற்றிக் கொண்ட பிறகு, அப்பாவுடன் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டான் மணி. அவனுக்கு அவன் அம்மா கையிலே கடைசியாச் சாப்பிட்ட ஞாபகம் வந்துகொண்டே இருந்தது.

“சார், சார்.” என்று அழைத்துக்கொண்டே வீட்டின் முன் கூடத்தில் நுழைந்தான்.

“யாரு...?”

“சார் என்னைத் தெரியுதா?”

“நீங்க யாரு?”

“சார், நான்தான் ஒங்க மாணவன் மணிராஜு”

“எந்த மணிராஜு?”

“சார், குளத்து தெரு சுந்தரராமன் புள்ளை மணிராஜு”

“ஏம்பா 20 வருஷத்துக்கு முன்னாடி, காணாமப் போன மணியா?”

“ஆமா, சார்...”

“ரொம்ப சந்தோஷம்... வாங்க, எப்போ வந்தீங்க? எங்கே இருக்கீங்க?”

“என்ன சார் என்னைப் போய் வாங்க நீங்கன்னு கூப்பிடுறீங்க... நான் இன்னமும் ஒங்க மாணவன்தான் சார்... வாடா, போடான்னே பேசலாம்”

“பேசலாந்தான்... அதைவிட நானே மரியாதையாக் கூப்பிட்டா அதைப் பார்த்து மத்தவங்களும் கூப்பிடுவாங்கல்லீயா, போகட்டும் எப்போ வந்தீங்க?”

“சார் என்று அவர் காலைத் தொட்டு வணங்கியபடியே, காலையிலேதான் சார் வந்தேன். இப்போ பம்பாயிலே நல்ல நிலமையிலே இருக்கேன். நல்ல வசதியா இருக்கேன்”

“சார், பாமா அக்கா இருக்காங்களா, எங்கே இருக்காங்க?”

“அவ இப்போ குடும்பத்தோட அமெரிக்காவிலே இருக்காப்பா”

“அவங்களை நான் மறக்கவே முடியாது சார்”

“அப்போ எங்களை எல்லாம் மறந்திறலாமா”

"நான் அப்படிச் சொல்லலை சார்... என்னை நீங்க வகுப்பிலே சரியாப் படிக்காம, வீட்டுப் பாடம் எழுதாம வரும்போது, நீ உருப்பட மாட்டே.. மக்கு, மாடு... நீ ரொம்ப கஷ்டப்படுவே, என்று திட்டுவீங்க. அக்காதான் மணி 'நீ வருத்தப்படாதே எங்கப்பா, அதுதான் ஒங்க சார், யாரையாவது உருப்படமாட்டேன்னு சொன்னா, அவன் கண்டிப்பா ரொம்ப ஒசந்த நெலமைக்கு வந்திருவான்... நீ வேண்ணாப்பாரு, நீயும் ரொம்ப ஒசந்த நெலமைக்கு வருவே.. அப்போ இந்த அக்காவை மறந்திறாதேடா'ன்னு அடிக்கடி சொல்லும். அது இன்னமும் என் காதிலே விழுந்துக்கிட்டே இருக்கு சார். அத்தோட 'டேய் மணி நீ நல்லா வந்ததுக்குப் பொறகு மறக்காம நம்ம பள்ளிக்கூடத்தை புதுசாக் கட்டிக் கொடுடா... அது ஒன்னால கண்டிப்பா முடியும்டா'ன்னு அக்கா சொல்லும்"

"என்னப்பா செய்யுறது? புள்ளைங்க சொன்னபடி கேக்கலைன்னா, சரியாப் படிக்கலைன்னா கோபத்திலே நீ உருப்பட மாட்டேன்னு திட்டிப்புடுறம். வாக்கத்தவன் வாத்தியார் போக்கத்தவன் போலீஸ்காரன்னு சொல்லுவாங்க... ஆனால் நான் சொல்லி வாக்கு எதிர்மாறாத்தான் பலிச்சிருக்கு.."

"அப்படி இல்லே சார்.... வாக்கைத் திருத்துறவர் வாத்தியாரு, போக்கைத் திருத்துறவரு போலீஸ்காரரு சார். வாக்கு சரியா வரலைன்னா, சரியாப் படிக்காம தப்பாப் படிக்கிற வாக்கை திருத்துறது நீங்கதானே சார். அது மாதிரி ஒழுக்கம் தவறி எதனாச்சும் தப்பான போக்கிலே போறவங்களை திருத்தி, நல்ல வழிக்குப் போகணும்ன்னு சொல்லி எச்சரிக்கை செய்யுறவங்க போலீஸ்காரங்கதானே சார்..."

"சபாஷ். நல்லா இருக்கு... என்னை மறக்காம வந்து பாத்ததுக்கு ரொம்ப சந்தோஷம்..."

"சார்.... நம்ம ஊர் பள்ளிக்கூடத்திலே இப்போ எத்தனை புள்ளைங்க படிக்கிறாங்க..."

"இப்போ... சற்று யோசித்தபடியே, பக்கத்துக் கிராமங்களிலேருந்து வருவதை எல்லாம் சேர்த்து சுமார் 800 பேர் இருக்கும்... நான்தான் ரிட்டையராகிட்டேனே... சரியான விவரம் இப்போ இருக்க ஹெச்செம்மைக் கேட்டாத்தான் தெரியும்"

"சார்.. இப்போ நான் ரொம்ப நல்ல நிலமையிலே இருக்கேன். வருமானத்துக்குக் குறைச்சல் இல்லே. நிறைவா இருக்கேன். நல்லா சம்பாதிக்கிறேன்.. நம்ம ஊர் பள்ளிக்கூடத்துக்கு ஏதாவது பெரிசா உதவலாம்ன்னு இருக்கேன் சார்..."

"பிள்ளைங்களுக்கு யூனிபாரத்திலே இருந்து புத்தகம், நோட்டு, சைக்கிள் வரை எல்லாத்தையும் அரசு கொடுத்துருது... ஒங்களை மாதிரி பழைய மாணவங்க ஒரு சில பேரு தொடர்ந்து ஒரு சில உதவி செய்யுறாங்க.."

"சார்... நான் வரும் போது பள்ளிக்கூடத்தைப் பார்த்தேன். அதே பழைய ஓட்டுக் கட்டடம் சார்... அதை முழுசா இடிச்சுட்டுப் பெரிசாக் கட்டிக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன் சார்..."

"ரொம்ப சந்தோஷம்... வாங்க... நானும் வாறேன்.. ஸ்கூலுக்குப் போய் பாத்துட்டு வருவோம்..."

"சார், நான் பழைய மாணவன் மணி ராஜு... இப்போ கடவுள் என்னை நல்ல நிலமையிலே வைச்சிருக்காரு... இந்தப் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, புதுசா ஒரு பெரிய கட்டிடம் என் சொந்த செலவிலே கட்டிக் கொடுக்க விரும்புறேன்... இது என்னோட 'பிசினஸ் கார்டு'. என்ன என்ன தேவையோ.. அத்தனை அனுமதியையும் வாங்கி, புதுசாக் கட்ட எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லே சார்.... நான் குறைஞ்சது ஒரு கோடி ரூபாய் தர்றேன்.... எப்போ எவ்வளவு பணம் தேவையோ அதை உடனே உங்களுக்கு நம்ம ஊர் பாங்குக்கு அனுப்பி வைக்கிறேன்... தயவு செய்து நீங்கதான் பொறுப்பா இருந்து முடித்துத் தரணும்..."

வாத்தியாருக்கு இப்படி ஒரு மாணவனா... இது கனவா.. இல்லே நிஜம்தானா... என்று சற்று மன அதிர்ச்சியும் ஆனந்தமும் அடைகிறார்.

"தம்பி, என்ன ஞாபகத்திலே இருக்கீங்க... உங்களைத்தான் பேசுவதற்கு மேடைக்கு அழைக்கிறாங்க. போங்க ஒங்க அனுபவத்தை எல்லோருக்கும் சொல்லுங்க" என்று வெங்கட்ராம அய்யர்

சொன்னதும்தான் அவன் சுய நினைவுக்குத் திரும்பினான். சற்றே சுதாரித்துக் கொண்டு மேடையில் ஏறி, ஒலிபெருக்கி முன்பாக நின்று, சற்றே குரலைச் சரி செய்துகொண்ட பிறகு பேச ஆரம்பிக்கிறான்...

"முதல்வர் ஐயா அவர்களே, எம்.எல்.ஏ. அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, அண்ணன்களே, தம்பிகளே, உறவினர்களே, ஊர்க்காரர்களே... எல்லோருக்கும் வணக்கம்... நான் இந்தப் பள்ளியில்தான் ஏழாம் வகுப்பு வரை படித்தேன். அங்கே ஒரு மாமரம் தெரிகிறதே அதன் அடியில்தான் வெங்கட்ராம அய்யர் சார் பாடம் நடத்தினார். நான் வகுப்பில் இருந்த கடைசி நாள் ஆகஸ்ட் 14 ஆம் நாள். அதை மறப்பதே இல்லை. அடுத்த நாள் சுதந்திரத் திருநாள். அன்றுதான் நான் செய்யாத ஒரு தப்புக்காக குற்றம் சுமத்தப்பட்டு 'திருடன்' என்ற முத்திரையுடன் என் அப்பா முன்பாக நிறுத்தப்பட்டேன். நான் வகுப்பில் ஒழுங்காகப் படித்தவன் இல்லை. அது உண்மை. ஆனால் கண்டிப்பாக நான் திருடன் இல்லை. நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் யாரும் என்னை நம்பவில்லை. என் அப்பா என்னைப் பெல்டால் அடித்த தழும்பு இன்னும் என் முதுகுப்புறத்தில் இருக்கிறது. நான் திருடன் இல்லை என்று என்னை அப்போது நம்பிய இரண்டு ஜீவன்கள் ஒன்று என்னைப் பெற்ற தாய். இரண்டாவது நான் என்றும் வழிகாட்டியாக நினைத்துப் போற்றும் பாமா அக்கா... பாமா அக்கா வேறு யாரும் இல்லை... வாத்தியார் வெங்கட்ராம ஐயர் சாருடைய பொண்ணுதான்.

"என் அம்மா, 'மணி, நீ திருடன் இல்லை. நீ என் புள்ளை. ஒனக்கு நல்லது மட்டுந்தான் செய்யத் தெரியும். கண்டிப்பா நீ தப்புப் பண்ண மாட்டே. ஒன்னாலே தப்பு செய்யவோ தடம் மாறிப் போகவோ முடியாது'ன்னு சொல்லுவாங்க. அந்தத் தாய்தான் என் முதல் தெய்வம். அவங்க எங்கேயோ இருந்து இன்னமும் என்னை வழி நடத்துறாங்கன்னு இன்னிக்கும் என் மனசு சொல்லிகிட்டே இருக்கு.

என் மீது பழி சுமத்தப்பட்டபோது எனக்கு இந்தப் பள்ளியை, இங்கு வேலை செய்த ஆசிரியர்களை, உடன் படித்த மாணவர்களை, என்னைப் பெற்றெடுத்த என் அப்பாவை, சொந்தங்களை யாரையுமே பார்க்கப் பிடிக்கவில்லை. வாழவே பிடிக்கவில்லை. ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாம் என்று தண்டவாளத்தின் மேல் ஏறி நடந்து சென்றேன். அப்போது என் பின்புறத்தில் இருந்து ஒருவர் என் முதுகில் ஓங்கி அடித்தார். நான் வலி தாங்காமல் அழுது விட்டேன்...

'பைத்தியக்காரா... அது ரயில் ஓடுவதற்காக.. நீ நடந்து செல்லும் சாலை இல்லை' என்று திட்டினார். அதன் பிறகு எனக்கு சாப்பிட அவரே உணவு வாங்கிக் கொடுத்தார். என்னைப் பற்றி முழுதும் விசாரித்தார். நான் உண்மையைச் சொல்லவில்லை. காரணம் திரும்பவும் என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டுவிடுவார் என்ற பயம் தான்.... அதன் பிறகு 'நான் பம்பாயில் வசிக்கிறேன். நீயும் என்னோடு வா... என் வீட்டில் வேலைகளைப் பார்த்துக் கொண்டு இரு' என்று கூட்டிச் சென்றார்.

எத்தனையோ முறை அவர் என் குடும்பத்தைப் பற்றி விசாரித்திருக்கிறார். நான் ஒரு அனாதை என்று மட்டுமே சொல்லுவேன். என்றாவது ஒரு நாள் நான் உச்சத்தைத் தொட வேண்டும், கை நிறைய சம்பாதிக்க வேண்டும், எல்லோரும் நம்மைப் பற்றிப் பேசும்படி உயர வேண்டும் என்ற வைராக்கியம் மட்டும் மனதில் அழியாமல் இருந்தது.அப்படியே காலம் நகர்ந்தது...

அதன் பிறகு நான்தான் படிக்கவில்லையே... யார் பெரிய வேலை கொடுப்பார்கள்

## இன்னும் ஒரு வயிறு வேண்டும்...

செட்டிநாட்டு விருந்து ஒன்றில் கலந்து கொண்ட அறிஞர் கி.வா.ஜ.வைப் பலரும் உபசரித்து, 'ஐயா, என்ன வேண்டும்? என்ன வேண்டும்?' எனக் கேட்டார்கள்.

கி.வா.ஜ., சிரித்துக் கொண்டே, 'நான் ஒன்றைக் கேட்பேன். ஆனால், அதை உங்களால் தர முடியாது' என்றார்.

'இல்லை ஐயா! கேளுங்கள் தருகிறோம்' என்றார்கள். 'என்ன வேண்டும்? என்ன வேண்டும்? எனக் கேட்டீர்கள், இதற்கு மேலும் சாப்பிட வேண்டுமெனில் எனக்கு இன்னும் ஒரு வயிறு வேண்டும்' என்றார் கி.வா.ஜ.

– மேலை.பழநியப்பன், கரூர்.

என்று கருதி சினிமாவில் ஒரு சாதாரண லைட்மேனாகச் சேர்ந்தேன். காமிராவை இயக்குவதற்கு நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டேன். பெயரை ராஜுசுந்தர் என்று மாற்றிக் கொண்டேன். அதிர்ஷ்டமும் உதவி செய்தது.

நான் பம்பாயில் வேலைக்குச் சேர்ந்த பிறகு என் குருநாதர் சொன்னது இன்னும் நன்றாக நினைவில் இருக்கிறது. நான் படிக்காத முட்டாளாக இருப்பதாக வருத்தப்படுவேன். அப்போதெல்லாம் அவர் சொல்லுவார், பள்ளியில் படிக்கும் போது ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து 'நீ எதையுமே கற்றுக் கொள்ளத் தகுதியில்லாத வடிகட்டின முட்டாள். நீ பள்ளிக்கூடத்துக்கு வந்து காலத்தை வீணாக்குவதை விட எங்காவது கூலி வேலை செய்தாலாவது பிழைத்துக் கொள்ளுவாய்' என்று அடிக்கடி திட்டினாராம். அதற்காக அவன் வீணாகிவிடவில்லை. இப்போது நாமெல்லாம் அனுப வித்துக் கொண்டிருக்கிறோமே மின்சாரம், மின்சார பல்புகள், சினிமா இவை எல்லாவற்றையும் கண்டுபிடித்த மேதை தாமஸ் ஆல்வா எடிசன்தான் அந்த அவன்' என்றார்.

நான் தளர்ச்சியடையும் போதெல்லாம் அவர் சொல்லு வார் 'டேய் ராஜு, இதுவரை உன்னாலே என்ன செய்ய முடியல்லைன்றது இல்லேடா வாழ்க்கை, இனிமே நீ என்ன செய்யப்போறே என்பதிலேதான் இருக்கு. அகில இந்தியப் புகழ்பெற்ற சினிமா நட்சத்திரம் ஷாருக்கான், தெரு ஓரம் இருந்த பெஞ்சிலே தூங்கி எழுந்து, தினமும் தன் நண்பன்கிட்டே ரூ.20 வாங்கிட்டு பம்பாய் நகரத்துக்குள்ளே வந்து சான்ஸ் கேட்டு, அதன் பிறகுதான் உயர்ந்த நிலைக்கு வந்தாரு. நம்ம கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை எடுத்துக்கோ. அவரு எட்டாம் கிளாஸ்லே பெயிலாகி, அதன் பிறகுதான் பெரிய விளையாட்டு வீரரா வந்தாரு. இவ்வளவு ஏன், இந்தியாவுக்கு இரண்டு பிரதமர்களை அடையாளம் காட்டிய காமராஜர்கூட எட்டாம் கிளாஸ் படிக்காதவருதாண்டா. உயர்ந்த தத்துவங்களை எல்லாம் மிகவும் எளிமையா மனசுலே பதியும்படியா பாட்டு எழுதினாரே கண்ணதாசன் அவருகூட எட்டாம் கிளாஸ் பாஸாகாதவருதான்டா. சாதனைங்கிறது படிப்பினாலே மட்டுமில்லே. இனிமே நீ என்ன செய்யணும்ன்னு தீர்க்க மான முடிவு எடுக்கிறியோ அதன் பலன்லே கிடைக்கப் போறதுதான்டா. அதனாலே தளர்ச்சி அடையாமே முயற்சி செய்யுடா' என்பார். அதெல்லாம் நான் கஷ்டத்தில் இருந்தப்போ குடித்து வளர்ந்த டானிக், ஊக்கமருந்துங்க...

உன்னால் முடியாதது எதுவும் இல்லை. ராஜு நீ ஆயிரம் தடவை தோற்றாலும் முயற்சியைக் கை விடாதே. ஆயிரத்து ஒன் றாவது தடவை வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைத்து விடும் என்பார். அவர் எனக்குக் கிடைத்த இன்னும் ஒரு பாமா அக்கா. அது போன்ற சொற்கள்தான் எனக்கு உரமாக அமைந்தன.

நான் வேலை செய்த இந்தி, மராட்டி, பஞ்சாபி படங்கள் எல்லாமுமே பெரிய வெற்றி பெற்றன. பெரிய பெரிய நடிகர்கள் எல்லோருமே எனக்கு நண்பர்கள் ஆனார் கள். இந்தியாவிலேயே சிறந்த ஒளிப்பதி வாளர்ன்னு இந்திய குடியரசுத்தலைவர் கரங்களில் இருந்து மறக்க முடியாத பரிசும், சான்றும் பெற்று விட்டேன். இந்திய சினிமா சரித்திரத்திலே எனக்கும் ஒரு சின்னப் பக்கம் ஒதுக்கப்பட்டு இருக்கு. கோடிக்கணக்கில் சம்பாதித்தேன். இதுக் கெல்லாம் காரணம் என் அம்மா கொடுத்த ஊக்கமும், பாமா அக்கா, என் குருநாதர் அடிக்கடி 'ராஜு நீ சாதிக்கப் பொறந்தவன், கண்டிப்பா ஒன்னால முடி யும்' என்று அடிக்கடி கொடுத்த தைரிய மும்தான்.

என்னை முதலில் பம்பாய்க்கு அழைத்துச் சென்று, என்னை வளர்த்து ஆளாக்கிய மாதவன் ஐயாவுக்கு நன்றிக் கடனா, அவரு வேண்டாம்ன்னு மறுத்தா லும் கட்டாயப்படுத்தி நல்ல வீடு ஒன்று வாங்கிக் கொடுத்தேன்.

நான் எனக்காக இல்லாட்டினாலும் என்னைப் பெற்றெடுத்த அம்மா அப்பா வுக்காக, மரியாதைக்குரிய பாமா அக்காவுக் காக, இந்த ஊரு பள்ளிக்கூடத்தைப் புதிதா, பெரிசா கட்டிக் கொடுக்கணும்ன்னு நினச்சேன். என்னோட அம்மா ஆசியாலே, வாத்தியார்கள் வாழ்த்துக்களாலே செய்து முடிச்சுட்டேன்....

நான் 23 வருஷத்துக்கு முன்னாடி இந்த ஊரைவிட்டு ஓடிப்போனாலும், எத்தனை

உயரத்துக்குப் போனாலும் இதுதான் எனக்குச் சொந்த ஊரு. இது நான் பொறந்த பூமி. அதை மறப்பதில்லை...

எல்லோராலும் சாதனைகளைச் செய்ய முடியும். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தா முடியாதது எதுவும் இல்லே. நீங்களும் உங்க பிள்ளைகளைத் திட்டாமல், கண்டிக்காம, அன்பாலே இதை எல்லாம் சொல்லிக் கொடுங்க. நாம் எல்லாரும் ஒற்றுமையாக இருந்தால்தான் நம்ம ஊரு எப்பவும் நல்லா இருக்கும். நன்றி, வணக்கம்."

ஒரு சில நிமிடங்களுக்கு நீண்ட கை தட்டல் ஒரு வழியாக ஓய்ந்தது. விழா இனிதே முடிந்தது.

"உங்களை இந்தப் பள்ளிக்கூடம் திருட்டுப் பட்டம் கட்டி விட்டதாலே ஓடிப்போயிட்டேன்னு சொன்னீங்களே... அது தப்பே இல்லே, நீங்க திருடன்தான். இந்த ஊருக் காரங்க மனசை எல்லாம் மொத்தமா திருடிய திருடன் நீங்கதான் என்று சிரித்துக் கொண்டே சொன்னார் வெங்கட்ராம அய்யர். அதைக் கேட்டு அவனும் சிரித்து விட்டான்.

"நான் ஊருக்குத் திரும்ப வந்தது இரண்டு காரணங்களுக்கு. ஒன்னு முடிஞ்சிருச்சு. அடுத்து என்னோட சின்ன வயசிலே என் அம்மா எனக்கென்று அடையாளம் காட்டிய பொண்ணு, அவளுக்கு இப்போ 29 வயசு ஆகிருச்சு. அவளும் என்னைப்போலவே இன்னமும் கல்யாணம் பண்ணிக்காம இருக்கா. நல்ல நாளாப் பாத்து, அவளைக் கல்யாணம் செய்து பம்பாய்க்குக் கூட்டிட்டுப் போகப் போறேன்....

"அப்போ நானு..." என்று இழுத்தார் சுந்தரராமன்.

"நீங்க இல்லாமலா.... அப்பா நீங்கதான் முதல்லே"

இந்த சந்தோஷம் எப்பவும் நிலைத் திருக்கட்டும் என்று மனதார வாழ்த்தினார் வாத்தியார் வெங்கட்ராம அய்யர்.

தான் ஈட்டிய பொருளால், தானும் வாழ்ந்து, தன் சுற்றமும், ஊரும் வாழும்படி உதவி செய்ய வாழ்வதற்கும் பணம் மட்டும் போதாது, மனமும் வேண்டும். அது ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்த வரம். அதைத்தான் வள்ளுவர் "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகு அவாம் பேரறிவாளன் திரு" என்றார். (பொருள்: ஈர நெஞ்சம் உடையவனிடம் சேரும் பொருள் ஊருக்கே பயன்படும் ஊருணியில் வந்து சேரும் வெள்ள நீரைப் போன்றது)

நீதி "முயன்றால் முடியாதது என்று எதுவும் இல்லை"

✷

ரீ வைண்டிங்

## பொங்கலோ பொங்கல்... சக்கரப் பொங்கல்...

சென்ற ஆண்டு பொங்கலுக்கு, மகன் வீட்டிற்கு நானும் கணவரும் சென்றிருந்தோம். மேடவாக்கம் ஐஸ்வர்யா அபார்ட்மெண்டில் மகன் வசிக்கிறான். மருமகள், மகன் இருவருமே ஐடி கம்பெனியில் பணிபுரிகிறார்கள்.

பொங்கலன்று காலை சீக்கிரமே எழுந்து, குளித்து, புடவை உடுத்தி, (அன்று மட்டும்தான் புடவை) மருமகள் பிரஸ்டீஜ் குக்கருக்கு மஞ்சக்கொத்து கட்டி, கிச்சன் மேடையிலேயே குக்கரில் சர்க்கரை பொங்கல் வைத்து, சாமி ரூமில் கும்பிட்டு, குழந்தைகளைக் கூப்பிட்டு, "பூஜா, அரவிந்த் Come on, pray to God, We are celebrating Pongal for God Sun. சீக்கிரம் Breakfast சாப்பிட்டு TVயில Pongal புரோகிராம்ஸ் பார்ப்போம், வாங்க" என்று கூறியதும், என் மனம் ஊரில் பொங்கல் கொண்டாடியதை நினைவு கூர்ந்தது.

ஒரு மாசம் முன்னாலே முகப்பில் குடியிருக்கும் குடியான வீட்டுப் பெண்களைக் கூப்பிட்டு, தீத்தி, மொழுகி, அத்தனை சாமானையும் வெளக்கி, கழுவி, பொங்க மொதநாள் பச்சரிசி மாவில் வாச எரம்ப நடுவீட்டுக் கோலமிட்டு, முறிச்செம்பை தகதகன்னு வெளக்கி, வெளக்குச் சட்டி எடுத்து, பிள்ளையார் கோயிலில் காலை 5 மணிக்கு, பொங்கலிட்டு, பிறகு வீட்டில் கூட்டுக்காய் கொழம்பு, பலாக்காய் கூட்டு, அவரக்கா, ச.வ.கிழங்கு பொரியல், பருப்பு மசித்து, கரும்பு வைத்து, படையலிட்டு, பால் பொங்கிற்றா என வளவுக்குள் விசாரித்து, கொப்பி கொட்டப் போய் பொங்க இட்ட அழகென்ன? இன்று மக்க பெண்டுக பொங்கலிடும் அழகென்ன? (ஆத்தை, இதச் சொன்னா இந்தச் சோறும் கிடைக்காதுன்னு வாழும் வாழ்க்கை என்ன? – இது சிகப்பி ஆச்சி ஆகிய நான், மனதில் நினைத்துக் கொண்டதுதான்).

–திருமதி டி.தையல்நாயகி, மதுரை.

நமது செட்டிநாடு இதழில் 'கோயில் சார்ந்த குடிமக்கள்' என்று ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் முக்கியத்துவம் வாய்ந்தது நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் என்றிருந்தது. இந்த வரலாறு எல்லாம் தற்போதுள்ள பிள்ளைகளுக்குத் தெரியாது. இதைப் படித்தவர்களுக்குத்தான் இதன் பெருமை தெரியும். ஒன்பது நகரக் கோயில்கள் பற்றியும் எழுதியிருந்தீர்கள். நான் அந்தப் புத்தகத்தை ஜெராக்ஸ் காப்பி எடுத்து, ஆவணப்படுத்தி வைத்திருக்கிறேன். உங்கள் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**–டாக்டர் எஸ்பி. கண்ணப்ப செட்டியார், காளையார்மங்கலம்.**

அட்டையில் பழனிமலை முருகன் பளிச்சென்று காட்சியளித்தார். சமைப்போம் சுவைப்போம் சூப்பர். விதி விளையாட்டு - வீணைப் பாட்டு வித்தியாசமாக உள்ளது. நகரத்தார் சிகரத்தார், காரைக்குடியில் கம்பன் விழா, இது நம்ம நாடு ஆகியவையும் நன்று.

டாக்டர் எம்.ஏ.எம்.மிற்கு அஞ்சலி, மனதைத் தொட்டது. மறந்ததும் பறந்ததும், முதுபெரும் புலவர் வ.சுப.மாணிக்கம், ஆத்தா-அப்பச்சி மாநாட்டுச் செய்திகள், படங்கள் ஆகியவை அம்சமாக இருந்தன. சிட்டாபிமானம் சிட்டாக உள்ளது. சிறுவர் நாடு, சிறுபிள்ளைகளுக்கு சிறப்பான விருந்து.

**–ஏஎன்.சிதம்பரம், விரையாச்சிலை.**

இ.பி.கோ. என்பதற்கு அருமையான விளக்கம், புதுமையான விளக்கம். கட்டுரை அற்புதமாக இருந்தது. சின்னஞ்சிறுசுகள் இக்காலத்தில் குறள் நெறி படித்து சிறக்க வேண்டும். இதுபோன்ற கட்டுரைகள் வெளியிட்டு, தொண்டு புரிவது பாராட்டுக்குரியது. பொருள் ஆழத்துடன் எழுதும் இக் கட்டுரையைத் தொடர்ந்து படிக்க ஆவல்.

**–முத்துப் பழனியப்பன், காரைக்குடி.**

இடக்கை கொடுப்பது, வலக்கைக்குத் தெரியாது என்ற பழமொழிக் கேற்ப, அரச குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் எம்.ஏ.எம்.மின் புதல்வர் திரு.முத்தையா செட்டியார், அவரது புதல்வி செல்வி மெய்யம்மை, தமிழக முதல்வரைச் சந்தித்து, வெள்ள நிவாரண நிதியாக ரூ. 3 கோடி அளித்தது நகரத்தார்களுக்குப் பெருமை! நகரத்தார்கள் தர்ம பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதை திரு.முத்தையா நிரூபித்து விட்டார். நல்வாழ்த்துக்கள்!

**–வ.பழனிக்குமார், கண்டவராயன்பட்டி.**

காரைக்குடி நாராயணனின் நகரத்தார் சிகரத்தார் மிக மிக அருமை! அவரது கவிதை நடைக் கட்டுரை, படிக்கப் படிக்க நகரத்தார் சிகரத்தைத் தொட்டுவிட்டோம் என்ற உணர்வைப் பிரதிபலித்தது.

சிட்டாபிமானம் சிறுகதை ஆழ்மனத்தைத் தொட்டது. புதுவயல் செல்லப்பனின், நகரத்தார் ஆன்மிகத் தொண்டும் அருந்தமிழ்ப் பணியும், மிக இனிமையாக உள்ளது.

டாக்டர் எம்.ஏ.எம்.மிற்கு அஞ்சலி பகுதியில் நீதியரசர் எம்.சொக்கலிங்கம், 'எம்.ஏ.எம்., எம்.ஏ.எம். என்று கூறும்போது இமயம் இமயம் என ஒலிக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார்கள். எம்.ஏ.எம்.அவர்களைவிட வயதில் நீதியரசர் சிறியவராக இருந்தாலும் அண்ணே என்று அரசர் அழைத்ததற்கான விளக்கம் அருமை! உலகில் (வாழ்க்கையில்) வந்தால் போகாதது அறிவு, ஞானம், பக்தி, சித்தி; போனால் வராதது உயிர், மானம் என்று மிக அருமையாக நீதியரசர் கூறியிருந்தார்.

எம்.ஏ.எம். அவர்களின் புதல்வர் எம்.ஏ.எம். ஆர்.முத்தையா, தனது தந்தையின் பாரம்பரியத்தைக் கட்டாயம் காப்பாற்றுவார்கள். 'அரசன் எவ்வழியோ அவ்வழி மக்கள்' என்ற கூற்றின்படியும், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற தாரக மந்திரத்தைக் காப்பாற்றி நமது நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் பெருமை சேர்ப்பார்கள்.

**–கே.வெங்கடாசலம், காரைக்குடி.**

நமது செட்டிநாடு இதழ், நகரத்தார் இதழ்களிலேயே மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. தமிழ் மொழி, செட்டிநாட்டு கலாசாரம், ஆன்மீகம், பண்பாடு மற்றும் செட்டிநாட்டு ஆலயங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தந்து வெளிவரும் நமது செட்டிநாடு வாழ்க, வளர்க என்று வாழ்த்துகிறேன்.

**–எஸ்.சின்னத்தம்பி, திருச்சி.**

### இராயவரம், நகரப் பிள்ளையார், ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்

இராயவரம், நகரப் பிள்ளையார் கோவில் ஸ்ரீ சித்தி விநாயகருக்கும், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கும், இராயவரம் நகரத்தார்களால் ஆலய விமானங்கள் புதுப்பித்தும், பஞ்சவர்ண கலர்கள் வைத்தும், திருப்பணி பூர்த்தியாகி, மன்மத வருடம் தைமாதம்29–ஆம்நாள்(12.2.2016)வெள்ளிக்கிழமை சதுர்த்தி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8.00 மணிக்கு மேல் 9.30 மணிக்குள், மீன லக்கனத்தில், நகரப் பிள்ளையார் கோவில் ஸ்ரீசித்தி விநாயகருக்கும், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பிகைக்கும், பால மாகணபதிக்கும் மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

### விருதும் வாழ்த்தும்...

1.1.2016 அன்று, திரு.பஞ்சு அருணாசலத்தையும் திரு.காரைக்குடி நாராயணனையும் வாழ்நாள் சாதனையாளர்கள் என்று தேர்ந்தெடுத்து, திரைப்படப் பத்திரிகையாளர் சங்கம் விருதுகளை வழங்கியது.

24.1.2016 அன்று திரைப்பட எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய தேர்தலில், புதுவசந்தம் அணியின் சார்பாக நின்று, அதிக ஓட்டு வித்தியாசத்தில் திரு.பஞ்சு அருணாசலம் உதவித் தலைவராகவும் திரு.காரைக்குடி நாராயணன் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இருவரும் நமது நகரத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. பஞ்சு அருணாசலம்:**

கவிஞருடன் 14 ஆண்டுகள் இருந்தவர். முதல் படம் சாரதா. முதல் பாட்டு 'மணமகளே மருமகளே வா வா'. அன்னக்கிளி படத்தில் இளையராஜாவை அறிமுகம் செய்தவர். கமல், ரஜினி, சிவாஜி உள்ளிட்டவர்களை வைத்து திரைப்படங்கள் தயாரித்தவர். சுமார் 1,000 பாடல்கள் இயற்றியவர். 20 படங்கள் கதை, வசனம் எழுதித் தயாரித்தவர்.

**திரு. காரைக்குடி நாராயணன்:**

திரைப்படக் கதாசிரியர், இயக்குநர். பாரத ரத்னா மூதறிஞர் ராஜாஜியின் 'திக்கற்ற பார்வதி'க்குத் திரைக்கதை வசனம் எழுதி, அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்.

இவர் எழுதி, இயக்கித் தயாரித்த 'அச்சாணி' படத்திற்கு பாரத ரத்னா எம்.ஜி.ஆர். சிறந்த படம் என்று கௌரவித்து ஒரு லட்ச ரூபாய் பரிசளித்தார். ஊர்வசி ஷோபாவை, இவர், இந்தப் படத்தில் அறிமுகம் செய்தார் (ஆண்டு 1978).

16 விருதுகள், 23 படங்கள், 36 நாடகங்கள், 6 சின்னத்திரை தொடர்கள், இவரது சாதனைகள்.

கவியரசர் கண்ணதாசனால், 'மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்' என்று பாராட்டப் பெற்றவர்.

நகரத்தார் வரலாற்றை, 'நகரத்தார் சிகரத்தார்' என்ற தலைப்பில் நமது இதழில் தொடராக எழுதி வருபவர்.

### மரியாதையும் மகிழ்ச்சியும்..

18.1.2016 அன்று, சிவகங்கை, குன்றக்குடியிலிருந்து பழநி தைப்பூசத்திற்குச் செல்லும் செட்டிநாட்டு 317 காவடிகளுக்கும் தலைமையேற்று வழிநடத்தி வரும் கண்டனூர் சாமியாடி செட்டியார், திரு.பழனியப்ப செட்டியாரையும், நகரத்தார் காவடிகளையும், பக்தர்களையும் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் திருக்கோவில் பரம்பரை அறங்காவலர்கள் பூலாங்குறிச்சி 'காங்கிரஸ்' திரு.வள்ளியப்பன் செட்டியார் புதல்வர் வழக்கறிஞர் திரு.வ.இராமநாதன் செட்டியாரும் காரைக்குடி திரு.முத்தையா செட்டியார் புதல்வர் திரு.மு.தண்ணீர்மலை செட்டியாரும், பிரசாதம் வழங்கி, மரியாதை செய்து PK.NK.Trust–க்கு சொந்தமான நுழைவாயில் அருகே வரவேற்று மகிழும் காட்சி. அருகே கோயில் நிர்வாகி, முனைவர் திரு.வை.கணேசன்.

# திருமண சேவை

இப்பகுதியில் மணமகன், மணமகள் வேண்டுவோர் தொடர்பான விவரங்கள், இலவச சேவை அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. தேவை இருப்போர் நேரிடையாக உரியவர்களைத் தொடர்பு கொண்டு, திருமணம் பற்றி முடிவெடுக்கலாம்.

பெயர் : சொ.சிவகுமார்
வயது : 34
நட்சத்திரம் : புனர்பூசம்
பெற்றோர் : வி.சொக்கலிங்கம்
சொந்த ஊர் : காரைக்குடி
கோவில் : வயிரவன் கோவில்
பிரிவு : பெரிய வகுப்பு
படிப்பு : எம்.சி.ஏ.
வேலை : ப்ராஜெக்ட் மேனேஜர் இன்ஃபோசிஸ். அமெரிக்கா
சம்பளம் : ரூ.80,000 (மாதத்திற்கு)
கைபேசி : 9003918162
04522681619

.....

பெயர் : க.ராஜாராமன்
வயது : 30
நட்சத்திரம் : .....
பெற்றோர் : கனகசபை
சொந்த ஊர் : மாத்தூர்
கோவில் : மாத்தூர் கோவில்
பிரிவு : மணலூர்
படிப்பு : பி.டெக். (மெக்கானிக்கல்).
வேலை : துணை மேலாளர். ஹுண்டாய் மோட்டார் இந்தியா
சம்பளம் : ரூ.1,00,000 (மாதத்திற்கு)
கைபேசி : 94866 00224
91504 32408

# வேலையைத் தேடி...

வேலை தேடுவோர் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள விழைவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

Name : TR.Arun Viswam
D.of B. : 14.05.1992
Qln. : BE (Mech.)
Marks : 65%
Year of Passing : 2015
Exp. : Nil
E-Mail : donviswa58@gmail.com
Cell : 94869 37883

.....

Name : K.Subramaniya Prabu
D.of B. : 07.01.1993
Qln. : BE (CSE)
Marks : .....
Year of Passing : 2014
Exp. : 5 Months
E-Mail : nabarprabhu@gmail.com
Cell : 96001 76433

.....

Name : R.Nachiappan
D.of B. : 17.06.1993
Qln. : BDS
Marks : .....
Year of Passing : 2015
Exp. : Nil
E-Mail : nacis1004@yahoo.com
Cell : 97916 86178

.....

Name : S.Meena
D.of B. : 16.08.1977
Qln. : MCA
Marks : 81%
Year of Passing : 2010
Exp. : 5 Years
E-Mail : meenasubramanian21@gmail.com
Cell : 99522 43835

திருமண சேவை, வேலையைத் தேடி... பகுதிகளில் இடம்பெற, ஒவ்வொரு மாதமும் 30–ஆம் தேதிக்குள் பெறப்படும் விவரங்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படும்.

## வாசகர்களின் கனிவான கவனத்திற்கு...

அனைத்து நகரத்தார் குடும்பங்களை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு, உறவுப் பாலமாக செயல்படும் நமது செட்டிநாடு மாத இதழுக்கு இன்றே சந்தா செலுத்தி, உறுப்பினராகுங்கள். சந்தாவை நேரில் மற்றும் மணியார்டர், காசோலை, வங்கி மூலம் செலுத்தலாம்.

### வங்கி மூலம் செலுத்துவதற்கு

கணக்கு பெயர் : **Namadhu Chettinad**
நடப்பு கணக்கு எண் : 60218283440
IFSC எண் : **MAHB0000400**
வங்கிக் கிளை : **Bank of Maharashtra, Mount Road, Chennai 600 006.**

மேலும் சந்தா தொகையை காசோலை / வரைவோலை மூலம் அனுப்ப விரும்புவோர், Namadhu Chettinad என்ற பெயரில் காசோலை எடுத்து, சென்னையில் மாற்றத் தக்க வகையில் அனுப்பலாம்.

### சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ.240/–, ஈராண்டு சந்தா ரூ. 480/–, ஐந்தாண்டு சந்தா ரூ.1,200/-, வாழ்நாள் சந்தா ரூ.10,000/–.
சிங்கப்பூர் / மலேசியா : 25 **SGD**
பிற நாடுகள் : 35 **USD**

சந்தா தொகை அனுப்பியவர்கள் தங்கள் பெயர் மற்றும் முகவரியை கடிதம் அல்லது **namadhuchettinad@gmail.com** என்ற இ–மெயிலுக்கோ தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள் ளப்படுகிறார்கள்.

மேலும், இங்குள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, சந்தா செலுத்தும் விவரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

**நமது செட்டிநாடு (மாத இதழ்),**
**ராணி சீதை அரங்கம், 6–வது மாடி,**
**603, அண்ணா சாலை,**
**சென்னை 600 006.**

நமது செட்டிநாடு

## உறுப்பினர் சேர்க்கை படிவம்

பெயர் : .....

முகவரி: .....

.....

.....

.....

கோவில் : .....

பிரிவு : .....

ஊர் :.....

இ–மெயில் : .....

கைபேசி எண்: .....

தொலைபேசி எண்:.....

சந்தா தொகை: ரூ.240 / 480 / 1200 / 10,000

சந்தா அனுப்பிய முறை:

நேரில் / மணியார்டர் / காசோலை / வங்கி

* Ref. No. : .....

*ஏற்கனவே இதழ் பெறப்பட்டு வந்தால், இதழ் அனுப்பப்படும் கவரில், தங்கள் முகவரிக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ள Ref.No.ஐ தவறாது குறிப்பிடவும்.

குறிப்புக்காக –

# வாசகர்கள் கவனத்திற்கு...

நமது செட்டிநாடு இதழில் மாதந்தோறும் இரண்டு பக்கங்களில், திருமணத் தகவல் தொடர்பான விளம்பரம், சமூக சேவையாகக் கருதி, இலவசமாகப் பிரசுரிக்க உள்ளோம். அந்தப் பகுதியில் வெளியிட மணமகன் / மணமகள் வேண்டுவோர், தங்கள் இ–மெயில், கோவில், பிரிவு உள்ளிட்ட முக்கிய விவரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

நம்மவர்கள் பல சந்தர்ப்பங்களில் கல்வி, திருமணம், ஆன்மிகம் உள்ளிட்ட பல நல்ல காரியங்களுக்கு நன்கொடை வழங்கி வருகின்றனர். அதன் விவரங்களை புகைப்படத்துடன் அனுப்பி வைத்தால் கொடையாளர்களைப் பாராட்டி, செய்தியாக வெளியிடப்படும்.

நம் நகரத்தார் குழந்தைகள் ஓவியம் தீட்டுதல், கவிதை புனைதல், நகைச்சுவை துணுக்குகள் எழுதுதல் என திறமைகள் கொண்டிருப்பர். அவர்களை ஊக்கப்படுத்தி, திறமையை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்த, அவர்களின் படைப்புகளை நமது இதழ் மாதந்தோறும் வெளியிட உள்ளது. இந்த வாய்ப்பினை பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். படைப்புடன், படைப்பாளர் போட்டோ, பெயர், வயது, வகுப்பு, பள்ளி, பெற்றோர் உள்ளிட்ட விவரங்களையும் அனுப்பி வைக்க வேண்டும். சிறார் களின் சிறந்த படைப்புகளுக்கு ஊக்கப் பரிசுகள் உண்டு.

புதிய முயற்சியாக வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் நம்மவர்களின் கல்வித் தகுதி உள்ளிட்ட விவரங்களை, நமது இதழில் பிரசுரிக்க உள்ளோம். வேலை வேண்டுவோர் தங்கள் போட்டோ பெயர், கல்வித் தகுதி, அனுபவம், கோவில், பிரிவு, முகவரி, கைபேசி எண், இ–மெயில் உள்ளிட்ட விவரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும். வேலை தர விழைவோர், அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்களை வெளியிட விரும்பும் தொழில் அதிபர்கள், இப்பகுதியில் தங்கள் தேவையைத் தெரிவிக்கலாம்.

வியாபார நோக்கோடு செயல்படும் தனி நபர்கள், அமைப்புகள் இந்த இலவசச் சேவை பகுதியில் தங்கள் தேவைகள் குறித்து வெளியிட அனுமதி இல்லை. அவர்கள் விளம்பரமாக வெளியிடலாம்.

## விளம்பரம்

நமது செட்டிநாடு இதழ் மாதந்தோறும் 40,000 இல்லங்களைச் சென்றடைகிறது. இதழில் விளம்பரம் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை பல வாசகர்கள் முன்வைத்தனர். அதனை ஏற்று விளம்பரங்கள் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

### விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. உள் அட்டை முழுப் பக்கம் (பல வண்ணம்) | ரூ. 30,000 | 14 X 22.5 cm |
| 2. உள் அட்டை அரைப் பக்கம் (பல வண்ணம்) | ரூ. 15,000 | 14 X 11 cm |
| 3. உள் பக்கம் முழுப் பக்கம் (பல வண்ணம்) | ரூ. 20,000 | 14 X 22.5 cm |
| 4. உள் பக்கம் அரைப் பக்கம் (பல வண்ணம்) | ரூ. 10,000 | 14 X 11 cm |
| 5. உள் பக்கம் கால் பக்கம் (பல வண்ணம்) | ரூ. 5,000 | 6.5 X 11 cm |

விளம்பரக் கட்டணத்தை Namadhu Chettinad என்ற பெயரில் காசோலையாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விளம்பரங்களை Soft copy அல்லது Hard copy – ஆகவோ அனுப்பலாம்.

**நமது செட்டிநாடு (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 6–வது மாடி,**

**603, அண்ணா சாலை, சென்னை 600 006.**

# சிறுவர்நாடு

## தெரிந்து கொள்ளுங்கள்...

வரிக்குதிரைகளை மிருகக் காட்சிசாலைகளில் பார்த்திருப்பீர்கள்! அவற்றைப் பார்த்தவுடன் உங்கள் மனதில் தோன்றும் முதல் கேள்வி - இந்தக் குதிரைகளின் உடம்பில் ஏன் இப்படி வரிகளாக இருக்கின்றன? என்பதுதான்! இந்தக் கேள்விக்குப் பலரும் பலவிதமான பதில்களைக் கூறியிருந்தாலும் இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை!

ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்கள் இருப்பதாக விலங்கியலாளர்கள் கருதுகின்றனர். அடிப்படைக் காரணமாக அவர்கள் கூறுவது அபாயகரமான விலங்குகளிட மிருந்து தப்பிப்பதற்காகத்தான் இப்படி வரிகள் உள்ளன என்பதாகும்.

கடல் ஆமைகளுக்கு நீண்ட துடுப்பு போன்று உறுப்புகள் இருப்பதால் அவற்றால் எளிதாக கடலில் நீந்த முடிகிறது. உடலின் முன்புறம் அமைந்துள்ள இந்த உறுப்புகள் ஒரு விமானத்தின் இறக்கைகளைப் போல உள்ளன. இந்த உறுப்புகள்தான் அன்றாட வாழ்க்கைக்கான இயங்குசக்தியை ஆமைகளுக்குத் தருகின்றன. கடலில் ஆமை நீந்துவதைப் பார்ப்பது ஒரு வியப்பூட்டும் அனுபவம்!

உலகில் அதிக நாட்கள் வாழக்கூடிய உயிரினங்களில் ஒன்று கடல் ஆமை. இதனுடைய ஓடு இதய வடிவில் இருக்கிறது. இது மிகவும் உறுதியா

## 10 வித்தியாசங்கள்

இரண்டு படங்களுக்கும் பத்து வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கு அடுத்த பக்கத்தில் விடை இருக்கிறது.



னது. ஆமையின் மிருதுவான உடல் பகுதியை இது பாதுகாக்கிறது. ஆமையின் கழுத்து மிகச் சிறியது. ஆனால் சுருங்கி விரியக்கூடியது. சராசரியாக ஒரு ஆமை 115 கிலோ எடை இருக்கும்.

கடலில் வேகமாக நீந்தும் ஆமை, கடற்கரையில் மிக மெதுவாகத்தான் நடை பயிலும். இதற்கும் அந்தத் துடுப்பு போன்ற உறுப்புகள்தான் பயன் படுகின்றன. மணலில் ஊர்வது அதற்குக் களைப் பூட்டுவதாக இருந்தாலும் முட்டை போடுவதற் காகவே கடற்கரைக்கு ஆமை வருகிறது.

வேடந்தாங்கல் போன்ற சரணாலயங்களுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட மாதத்தில், வெளிநாடு களிலிருந்து பறவைகள் வந்து தங்கிச் செல்கின்ற தைப் பார்த்து ரசித்திருக்கிறோம்.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் இந்தப் பறவைகள் சீசனுக்கு சீசன் காலம் சற்றும் மாறாமல், அதே இடத்தைக் கண்டுபிடித்து வந்து சேர்வது ஓர் உலக மகா ஆச்சரியம். சில பறவைகள், சென்ற ஆண்டு தாங்கள் தங்கிய மரத்தைக்கூடச் சரியாகக் கண்டுபிடித்து, அங்கேயே மீண்டும் தங்கக்கூடிய அளவுக்குத் திறமை உள்ளவை.

சரி, எப்படி இவற்றால் இது முடிகிறது? ஏதாவது காலண்டர், மேப் ஆகியவற்றை வைத்துக் கொண்டு செயல்படுகின்றனவா?

நீண்ட பகல் பொழுதுகள் மற்றும் தங்கள் உடலில் சீசனுக்கு ஏற்றபடி நிகழும் மாற்றங்கள் ஆகியவற்றைக் கொண்டுதான், இவை இப்படி டூர் வருகின்றன. சூரியன் மற்றும் சில நட்சத்திரங்கள் இருக்கும் திசை மற்றும் கோணத்தை வைத்துத்தான் குறிப்பிட்ட இடத்தைக் கண்டுபிடித்து வந்து சேர் கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார் கள். இறைவன் கொடுத்த வரம்!

சொர்க்கத்துப் பறவை என்றொரு இனம் இருக்கின்றது. 'பேர்ட்ஸ் ஆஃப் பேரடைஸ்' என்ற ழைக்கப்படும் இவை, நியூகினியாவிலும் அதன் அருகாமையிலுள்ள தீவுக்கூட்டங்களில் மட்டுமே காணப்படுகின்றன. உலகில் உள்ள பறவைகளி லேயே இப் பறவைக்குத்தான் அதிகபட்ச அலங்காரங்கள் இருக்கின்றன என்று கூறுகிறார் கள். இப் பறவையின் உடலில் உள்ள வண்ணக் கலவைகளையும், தோற்றப் பொலிவையும் வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது, அவ்வளவு அழகு!

தலையும் கழுத்தும் கண்ணைப் பறிக்கும்

பளீர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். மார்புப் பகுதி வெல்வெட் துணியால் மூடப்பட்டது போல கருப்பு வண்ணத்தில் புசுபுசுவென்று இருக்கும். தொண்டைப் பகுதி மட்டும் எமரால்ட் பச்சை வண்ணத்தில் இருக்கும். உடலின் பிற பாகங்கள் தேக்குமர வண்ணத்தில் இருக்கும். இறக்கைகளின் விளிம்பில் தகதகவென்று ஜொலிக்கும் தங்க நிறச் சிறகுகள் தொங்கிக் கொண்டிருக்கும். சிறகுகளின் முனை மட்டும் இரத்தச் சிவப்பில் சிவந்திருக்கும்.

இவ்வளவு அழகு நிறைந்த பறவை உலகின் வேறு பகுதிகளில் எங்கும் காணப்படாததால்தான் இதற்கு சொர்க்கத்துப் பறவை என்று பெயர் வைத்தார்கள்.

✶

### பத்து வித்தியாசங்கள் – விடை

1. இளநீர், 2. பெண்ணின் புடவை நிறம், 3. பாம்பாட்டியின் தலைப்பாகை, 4. மகுடி, 5.பாம்பாட்டியின் வலது கால் விரல், 6. வேடிக்கை பார்ப்பவர் நெற்றிப் பொட்டு, 7. வேடிக்கை பார்க்கும் மற்றவரின் வாய், 8. சிறுவனின் சட்டை, 9. பாம்பின் கண், 10. வேடிக்கை பார்க்கும் மூன்றாவது நபரின் கால்.

Namadhu Chettinad Printed by R.S.Shanmugam, at Surya Printers & Binders, Old No.37/2, New No.18, Oil Monger Street, Pudhupakkam, Chennai 600 014 and Published by A.N.Vairavan at New No.39, Old No.15, 2nd Floor, Flat No.6, Pookkara Street, Vadapalani, Chennai 600 026. Editor : N.Avadaiappan

# சிறுவர்நாடு

## புதிர் போட்டி

நீங்கள் ஒரு தோட்டத்தில் இருக்கிறீர்கள். அங்கு தோட்டக்காரர்கள் 5 பேர் உள்ளனர். ஒவ்வொரு தோட்டக்காரருக்கும் 5 அறைகள் உள்ளன. ஒவ்வொரு அறையிலும் 5 சிங்கங்கள் உள்ளன. ஒவ்வொரு சிங்கத்திற்கும் 5 குட்டி சிங்கங்கள் உண்டு. ஒவ்வொரு சிங்கத்திற்கும் 4 கால்கள். அந்தத் தோட்டத்தில் மொத்தம் எத்தனை கால்கள் உள்ளன?

A rich man gets ..... But a poor man has not..... to consume and will meet the end without.....At the end one cannot take..... along with him.

* One word, with eight letters, fits all the blank spaces.

1111 = R
2222 = T
3333 = E
4444 = N
5555 = ?

2+2+2+2+2
2+2+2+2+2
2+2+2+2+2
2+2X0+2=?

புதிர் போட்டிக்கான விடைகளை, தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள்.
சரியாக விடை அளிப்பவர்களுக்குப் பரிசு உண்டு.

அனுப்ப வேண்டிய முகவரி:

புதிர் போட்டி, நமது செட்டிநாடு, ராணி சீதை அரங்கம் 6–வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006.




## பிஞ்சு ஓவியம்

பெயர் : நா.விக்னேஷ்வரி
வயது : 15
வகுப்பு : ஒன்பதாம் வகுப்பு
பள்ளி: புனித ஆண்ட்ரூஸ் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி (திருமாந்துறை)
பெற்றோர் : லெ.நாச்சியப்பன் – மீனாட்சி

Namadhu Chettinad Tamil Monthly Regd.as Newspaper with RNI No. TNTAM / 2015 / 63956
Postal Registration No.TN/CC(S)DN/541/16-18

பழனி
பாதயாத்திரை
காட்சிகள்

If undelivered pl. return to Namadhu Chettinad (Tamil Monthly)
Rani Seethai Hall, 6th Floor, 603, Anna Salai, Chennai 600 006.

ISSN 2454-9649